விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 04 சனிக்கிழமை (20.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276




## 5ஆம் ஆண்டு புலமைப் பரிசிலில் தமிழ் மொழியில் தோற்றியோரில்

# மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் தேசிய ரீதியில் முதலிடம்



## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் 119 பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் தமிழ் மொழியில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் தர்மலிங்கம் பாசுபதன் 176 புள்ளிகளைப் பெற்று தமிழ் மொழி மூல மாணவர்களில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

5ஆம் ஆண்டு புலமை பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளன. இம் முறை புலமை பரிசில் பரீட்சையில் 3 மாணவிகள் ஒரே புள்ளிகளை பெற்று முதலிடத்தை பெற்று கொண்டுள்ளனர்.

கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க மகளிர் கல்லூரியின் மகிந்தி அமாஷா, புத்தளம் புனித அனுறு மத்திய மகா வித்தியாலயத்தின் மஹிஷா சுபுவி,பம்பலப்பட்டி லிண்சே மகளிர் கல்லூரியின் சச்சினி அஞ்சனா சேனதிர ஆகியோர் 183 புள்ளிகளை பெற்று முதலிடத்தை பெற்றுக் கொண்டுள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கு வெட்டுப் புள்ளி -114

(கொழும்பு)

கடந்த மாதம் நடைபெற்ற 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளிகள் மாவட்ட அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ளது. அவை வருமாறு;

கொழும்பு,கம்பஹா,களுத்துறை,கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, குருநாகல், கேகாலை ஆகிய மாவட்டங்களுக்கான வெட்டுப்புள்ளி 116; நுவரெலியா,கிளிநொச்சி, முல்லைத்தீவு, பதுளை ஆகிய மாவட்டங் களுக்கு 113; அம்பாந்தோட்டை 109;

யாழ்ப்பாணம் , வவுனியா ,மட்டக்களப்பு ; அம்பாறை,பொலனறுவை மாவட்டங்களுக்கான வெட்டுப்புள்ளி-114, புத்தளம்-112 அதே சமயம் இரத்தினபுரி மாவட்டத்திற்கு 108 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

மொனராலை (10 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்துக்கு அரிசி வழங்க தனியார் வர்த்தகர்கள் பின்னடிப்பு

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான அரிசியை கொழும்பிலுள்ள தனியார் வர்த்தகர்கள் கட்டுப்பாட்டு விலையில் அரசுக்கு வழங்கப் பின்னடிப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திவாரட்ன, யாழ். அரச அதிபர் க.கணேஷுக்கு அறிவித்துள்ளார். (10ஆம் பக்கம் பார்க்க)

## அனைவரதும் ஒத்துழைப்பே முதலிடம் பெற உதவியது

### மாணவன் பாசுபதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எனது கல்விக் காலம் போராட்டமான காலமாக அமைந்தாலும் அனைவரினதும் ஒத்துழைப்பே தமிழ் மொழியில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெறுவதற்கு முடிந்ததென தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் தர்மலிங்கம் பாசுபதன் தெரிவித்தார்.

எழுதுமட்டுவாழில் பிறந்த நான் 2000 ஆம் ஆண்டு இடம்பெயர்வு காரணமாக மிருசுவிலில் இயங்கிய (10 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 215 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் மேலதிகமான 215 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஏற்கனவே வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் 171 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் 215 தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதற்கு கடந்த புதன் கிழமை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன் மூலம் வடக்கு (10ஆம் பக்கம் பார்க்க)

## மண்டானில் எலும்புக் கூடு மீட்பு

(பருத்தித்துறை)

கரவெட்டி மண்டான் பகுதியில் ஆட்கள் நடமாட்டம் இல்லாத பற்றைப் பகுதியில் இருந்து மனித எலும்புக் கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இவ் எலும்புக் கூடு 30-35 வயது மதிக்கத்தக்க ஒருவருடையதாக இருக்கலாமென தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம், யாழ்.சட்டவைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.இளங்கோவன் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

மீட்கப்பட்ட எலும்புக் கூடு மருத்துவ பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச-52)

## தேசிய மட்ட போட்டிக்கு செல்லவுள்ள மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று தேசிய மட்டப் போட்டிகளுக்கு தகுதி பெற்றும் வவுனியாவில் தங்கியிருக்காமல் யாழ்ப்பாணத்திற்கு திரும்பிய மாணவர்கள் மீண்டும் தேசிய மட்டப் போட்டிகளுக்காக கொழும்புக்கு செல்ல முடியாதவர்கள் தன்னுடன் இன்று தொடர்பு கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பான மாணவர்களின் விபரங்களை தனக்கு அறிவிக்குமாறும் கல்வித் திணைக்கள உரிய அதிகாரிகளை அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளின் மூன்றாம் பகுதி போட்டிகள் (10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னித் தலைமையகத்துக்கு இராணுவத் தளபதி விஜயம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுமுன்தினம் வன்னிப் பிராந்தியத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வன்னிப் பாதுகாப்பு படைத் தளபதி மற்றும் விசேட படைப்பிரிவினருடன் இராணுவத் தளபதி விசேட கலந்துரையாடலொன்றை இவ் விஜயத்தின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் வருகையை எதிர்த்து ஐ.நா.முன்பாக கண்டனப் பேரணி

(நியூயோர்க்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவதற்காக எதிர்வரும் புதன்கிழமை நியூயோர்க் நகருக்கு செல்லவுள்ளார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.நாவுக்கு முன்பாக கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது. இது தொடர்பில் இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கை,

தமிழர் தாயகத்தில் தமிழின அழிப்பை நிகழ்த்தி வரும் முதன்மைப் போர்க்குற்றவாளி, உலக மனச்சாட்சியை ஏமாற்றுவதற்காகவே ஐக்கிய நாடுகள் சபைக்கு வரவுள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த நியூயோர்க் விஜயம்

(கொழும்பு)

63 ஆவது ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முகமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாளை நியூயோர்க்கிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

உலகநாடுகளின் முக்கிய தலைவர்கள் பலர் கலந்து கொள்ளும் இந்த பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்ப (10 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று மின்தடை

அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு இன்று சனிக்கிழமை காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை சுன்னாகம் பகுதி, குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை பகுதி, கட்டுவன், புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்சார விநியோகம் தடைப்படும் என இலங்கை மின்சார சபை யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## கலை இலக்கியப் பெருவிழா தொடர்பான கலந்துரையாடல்

நல்லூர் பிரதேச செயலக கலாசாலை பேரவை நடாத்தும் கலை இலக்கியப் பெருவிழா 27 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இளங் கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நிகழ்சிகளை வழங்குபவர்களுக்கான கலந்துரையாடல் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணியள வில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளதாக நல்லூர் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (ஓ)

## நல்லூர் அரிமாக் கழகத்தின் மாதாந்தக்கூட்டம் - பிற்போடல்

இவ்வார இறுதியில் அரிமாக் கழக மாவட்ட ஆளுநர் வருகை தர உள்ளதால் அவரது கூட்டங்களில் சகல கழகத்தலைவர்களும், வலயத்தலைவர்களும் பங்குபற்ற உள்ளதால் , நல்லூர் அரிமாக் கழகத்தின் நாளை நடைபெற இருந்த மாதாந்தக் கூட்ட நிகழ்வுகள் யாவும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற உள்ளதாக நல்லூர் அரிமாக் கழக தலைவர் அறிவித்துள்ளார். (ஓ)

## இலக்கியப் போட்டிகள்

பருத்தித்துறை கல்விக் கோட்டமும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகமும் இணைந்து பரு.கல்விக் கோட்டத்துக்குட்பட்ட 31 பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்படும் கட்டுரை, கவிதை,பேச்சுப் போட்டிகள் யாழ்.வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாக உள்ளதாக பருத்தித் துறை கோட்டக் கல்வி அதிகாரி பா. இரகுநாதன் அறிவித்துள்ளார். (ஓ-19)

## காரியாலய இடமாற்றம்

இதுவரை காலமும் நல்லூர் கமநல சேவை கட்டடத்தில் இயங்கி வந்த கமத் தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை யாழ்.மாவட்ட காரியாலயம் இம்மாதம் 15ஆம் திகதியில் இருந்து இல.127, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கீழ்மாடியில் ஒரு பகுதியில் இயங்கி வருகின்றது என கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## சம்பளப் பட்டியல்

இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பளப் பட்டியலில் திங்கள், செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் வலயக் கல்விப் பணிமனையில் கையொப்பமிடலாம் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-4)

# இலங்கை இலக்கியப் பேரவை விருது பெறும் நூல்கள்

இலங்கை இலக்கியப் பேரவையின் 2006/2007ஆம் ஆண்டுகளுக்குரிய விருதுக்கும் பரிசுக்குமுரிய இலக்கிய நூல்கள் வருமாறு,

**ஆய்வு** - 2006 -*மலாயக்குடிப் பெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும்* - பேராசிரியர் எஸ் சத்தியசீலன்

2007-*தென் கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல்* -மருதூர் எ.மஜீத்

**நாவல்** 2006-*உதயக்கதிர்கள்*-திக்குவலைக் கமால்

2007-*மீண்டும்வருவேன்*-செங்கை ஆழியான்

**சிறுகதை** -2006-*இளங்கோவின் கதைகள்*-இளங்கோ

2007-*வரால்மீன்கள்*-எம்.எஸ். அமானுல்லா

**கவிதை** -2006-தகுதி நிலையில் எதுவும் கிடைக்கவில்லை

2007-*இரண்டு கார்த்திகைப் பறவைகள்* -எஸ் புஸ்பானந்தன்

**காவியம்**-2006-*திரு நபி காவியம்* - ஜின்னாஹ் சுஷரிப்புத்தீன்

2007தகுதியான காவியம் எதுவும் கிடைக்கவில்லை

**நாடகம்** -2006-*மண்ணின் மைந்தர்கள்*-மு.அருள்பிரகாசம்

2007-*அரங்கப் படையல்கள்*-சைவப் புலவர் சு.செல்லத்துரை

**சிறுவர் இலக்கியம்**-2006-*உதவும் உள்ளங்கள்* -கவிஞர் மண்டூர் தேசிகன்

2007-*மரம்வெட்டியும் ஒரு தேவதையும்* - ஓ.கே.குணநாதன்

**சமயம்**2006-*இந்து ஆலயங்களில் மருத்துவ சுகாதாரம்*- டாக்டர் ஏஸ்.சிவசண்முகராசா

2007-*வெளிச்சத்தின் வேர்கள்*-தமிழ் நேசன்

**பல்துறை**2006-*தமிழர் மருத்துவம் அன்றும்அன்றும்*-கலாநிதி .பால. சிவகடாச்சம்

2007-*பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை* -கலாநிதி செ.யோகராசா

**மொழிபெயர்ப்பு**-2006-தகுதியானநூலெதுவும் கிடைக்கவில்லை.

2007-*பிளேக் கவிதைகள்* -வைரமுத்து சுந்தரேசன்

விழா நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் என இலங்கை இலக்கியப் பேரவை செயலாளர் எஸ். சிவதாசன் அறிவித்துள்ளார். (ஓ)

# மாவட்ட கலை இலக்கிய விழா

மாவட்ட கலை கலாசாரப் பேரவையால் நடாத்தப்படும் கலை இலக்கிய விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவைத் தலைவரும் யாழ்.அரசாங்க அதிபருமான க.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான கூத்துக் கலையை மேடையேற்றுவதற்குக் களம் அமைத்துக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு பாடசாலைகளுக்கு இடையேயான தமிழ்த்தினப் போட்டியில் வலய மட்டத்தில் வெற்றிபெற்ற கூத்துக்களும் மற்றும் யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையால் நடாத்தப்பட்ட போட்டியில் முதலிடம் பெற்ற கூத்து நிகழ்வும் மேடையேற்றி கௌரவிக்கப்படவுள்ளது.

இவ்விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் மௌலவி முகம்மது ஸரீப், முகம்மது மன்ஸுர் ஆகிய சமயப் பெரியார்களின் ஆசியுரைகள் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ்,சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கலாபூஷணம் நவாலியூர் நா. செல்லத்துரை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் சமயப் பெரியார்களின் ஆசியுரையைத் தொடர்ந்து இசைக்குயில் செல்வி ந.தனசொருபியின் தமிழ்த்தாய் வாழ்து இடம்பெறும்.

அத்துடன் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர்வித்தியாலயம், வட இந்து மகளிர் கல்லூரி கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவர்களினதும், இணுவில் ந.பரமேஸ்வரன் குழுவினர் ஆகியோரின் சிந்துநடைக் கூத்தும்,கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை மாணவர்களின் வடமோடி நாட்டுக்கூத்தும் இடம்பெறும்.

மேலும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் விசேட கூத்தும் இடம்பெறும். இந் நிகழ்ச்சிகளில் பங்குபற்றியோருக்கும், தேசிய வலய மட்ட தமிழ்த்தினப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கும் பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறும். (ஓ)

# பிராந்திய கால்நடை பண்ணையில் விற்பனை

யாழ்ப்பாணப் பிராந்திய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கால்நடை பண்ணையில், சேவல் கிலோ ஒன்று ரூபா 500/- வீதமும்,பண்ணையில் உற்பத்தி செய்யப் போகும் காடைக்கோழி முட்டைகள் ரூபா 5 விலையிலும் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் இவற்றை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தங்கள் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்த லிங்கம் அறிவித்துள்ளார்.அத்துடன் ஒருநாள் காடைக் குஞ்சுகள் அடுத்தமாதமளவில் உற்பத்தி செய்யப்பட வுள்ளதாகவும், குஞ்சுகள் தேவைப்படுவோர் முற்பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)




# சனசமூக நிலையங்களின் செயற்பாடு அவ்வப்பகுதி மக்களிலேயே தங்கியுள்ளது

கோண்டாவில் பகுதியில் உள்ள சில சனசமூக நிலையங்கள் தொழிற்படா நிலையில் உள்ளன. இதுதொடர்பாக நல்லூர் பிரதேச சபையின் பொறுப்பான அலுவலர் ஒருவரிடம் கேட்டபோது,பொது செயற்பாடுகளில் மக்களின் ஆர்வம் குறைவடைந்து வருவது குறித்து வேதனை தெரிவித்த அவர் ,ஒரு சனசமூக நிலையத்திற்கு அப் பகுதி மக்களே பொறுப்பு .நிர்வாகங்களை மக்கள் குறிப்பாக இளைஞர்கள் பொறுப்பேற்று சனசமூக நிலையங்களை மீள இயங்க செய்யவேண்டும். வினைத்திறனான நிர்வாகம் ஒன்று தெரிவு செய்யப்பட்டு பிரதேச சபையை அணுகினால் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டும் உயரதிகாரிகளின் உதவியுடனும் பிரதேச சபையால் உதவமுடியும்.

தங்கள் பகுதிகளின் முன்னேற்றத்திற்கு தாங்களே முன்னிற்க வேண்டும் என்பதை உணர்ந்து செயற்படும் பொதுமக்கள், பொது ஸ்தாபனங்களுடன் நல்லூர் பிதேசசபை என்றுமே இணைந்து செயற்பட தயாராகவே உள்ளது. செயற்பட்டுக்கொண்டிருக்கிறது என அவ் அலுவலர் உறுதிவழங்கியுள்ளார். ஆதலால் செயலிழந்திருக்கும் சனசமூக நிலையங்களைச் செயற்பட வைக்க அப்பகுதி இளைஞர்கள் முன்வருவார்களா? (ஓ-36)

## நூல்வெளியீடும் கலைவிழாவும்

தென்மராட்சிக் கலைமன்ற ஆதரவில் சுபாலயம் நடத்தும் தரம் 6-9 ற்குரிய பரதநாட்டியம் வினா விடையும் குறிப்புகளும் நூல்வெளியீடும் கலைவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் பதிவாளர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய அதிபர் கு. சிவானந்தம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ. கயிலாயபிள்ளை, யாழ்.பல்கலைக்கழக நுண்கலை நடனத் துறைத் தலைவர் திருமதி ஸ்ரீ முரளிதரன், யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வி.சிவசாமி, சாவகச்சேரி கொமர்ஷல் வங்கி உதவி முகாமையாளர் சௌ.சஞ்ஜீவ் மற்றும் தென் மராட்சி கல்வி வலய சேவைக்கால ஆலோசகர் (நடனம்) திருமதி பு.ஈழநேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-3)

## விளையாட்டு விழா

அத்தியடி கலைமகள் சிறுவர் கழக விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 1மணிக்கு அத்தியடி மைதானத்தில் கழகத் தலைவர் இ.குபேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ். உதவி பிரதேச செயலர் மரியதாஸ் ஜெகூ, சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி பி. இந்திரகுமார் ஆகியோரும் கௌரவ விருந்தினராக நல்லூர் றோட்டரக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.ரி.ஆர். க.சுசேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக அத்தியடி கிராமசேவையாளர் ஜே/78 எம்.பஞ்சலோகரஞ்சன்,சமுர்த்தி உத்தியோகத்தர் செல்வி சி.டெஸ்சிராணி, யாழ். மத்திய சபைத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், SOND சிறுவர் செயற்திட்ட இணைப்பாளர் செ.பிரகாஷ், கலைமகள் சிறுவர் மட்ட மேம்பாட்டுக் குழு பொருளாளர் ந. ஜெயராசா, மாதர் சங்கத் தலைவி செ. சச்சிதானந்ததேவி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

## யாழ்.லயன்ஸ் கழகங்களுக்கான ஆளுநர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

இன்று சனிக்கிழமை வலயம்-13 பிராந்தியம் 7க்குள் உட்பட்ட யாழ்ப்பாணம், திருநெல்வேலி வட்டம், இணுவில் ஆகிய கழகங்களுக்கான ஆளுநர் விஜயம் பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறும். இதில் கொழும்பிலிருந்து வருகை தந்துள்ள 306 B1 ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஷ துணைவியார் கீதா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். இவர்களோடு முன்னாள் ஆளுநர் லயன்ஸ் எஸ்.ராகவன், துணை ஆளுநர் லயன் லக்ஸ்மன் விஜயசிங்கா ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

இவ்விஜயத்தின்போது பல பயன்தரு சேவைத்திட்டங்களும் இடம்பெறும் என வலயத் தலைவர் ப.செந்தில்செல்வன் அறிவித்துள்ளார். (ஓ)




அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் கந்தர்மடம் இந்துசமயப் பேரவை ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் வலம்புரி அன்கோ அனுசரணையில் நடாத்தப்பட்ட திருமுறைப் பெருவிழாவில் செல்வி சுகந்தினி சிவராசா, செல்வி ஜெயப்பிரதா மகேந்திரன்.செல்வி நிஷாந்தினி நடராஜா ஆகியோர் திருமுறை இசைவல்லாளர்களாக மன்ற சார்பில் முத்தமிழரசி செல்வி புஷ்பா செல்வநாயகத்தால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் முத்தமிழரசி இசைவல்லாளர் ஒருவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் அருகில் வலம்புரி அன்கோ நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## இடதுகைப் பெருவிரல்

''இதோ இருக்கிறாரே, இவர் தான் என்னுடைய வலதுகை!'' என்று சிலபேரை அறிமுகப்படுத்துவ துண்டு. அப்படியென்றால் என்ன அர்த்தம்?

அவர் மிகவும் நெருக்கமானவர்–நம்பிக்கைக்குரியவர்–அவரில்லாமல் நான் இல்லை என்று அர்த்தம். ஆனால் நம்பிக்கைக்குரியது வலதுகையா? இடதுகையா? என்று கேட்டால் இடதுகை என்றுதான் சிலபேர் சொல்கிறார்கள்.

ஏன் தெரியுமா? பத்திரத்திலெல்லாம் இடதுகைப் பெருவிரல் ரேகையைத் தானே பதிவு செய்கிறோம் அதனால் இடதுகைதான் நம்பிக்கைக்குரியது என்று விரல் ரேகப் பதிவுக் கூடத்தில் வேலை செய்பவர்கள் சொல்கிறார்கள்.

முதலில் நாம் எதற்காக பெருவிரல் ரேகையை மட்டும் பயன்படுத்துகிறோம்? மற்றைய நான்கு விரல்களிலும் ரேகை உள்ளது தானே. அதாவது மற்றைய விரல் களைக் காட்டிலும் பெருவிரலில் அதிகமான ரேகைக் கோடுகள் இருக்கிறது.

இப்படி நெருக்கமாக இருப்பதால் நிபுணர்கள் நுணுக்கமாக ஆராய உதவியாக இருக்கிறது. அதனால் தான் பெருவிரலுக்கு அதிக முக்கியத்துவம்!

அதற்கு வலதுகைப் பெருவிரலைப் பயன்படுத்தினால் என்ன? ஏன் இடதுகைப் பெருவிரலை மட்டும் உபயோகப் படுத்துகிறார்கள்?

இதற்கும் ஒரு காரணம் உண்டு! நாம் தினசரி வேலைகளுக்காக வலதுகையை அதிகமாக உபயோகப் படுத்துவதால் அந்தக் கையிலுள்ள விரல் ரேகைகள் தேய்மானம் அடைவதற்கு வாய்ப்புக்கள் அதிகம். அதனால் ரேகைக் கோடுகள் தெளிவில்லாமல் போகலாம்.

ஆனால் இடதுகையை நாம் அதிகமாக உபயோகப் படுத்துவதில்லை. அதனால் இடதுகைப் பெருவிரல் ரேகையின் கோடுகள் தெளிவாக கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகம்.

அதுமட்டுமில்லை... அடிக்கடி உபயோகப்படுத்துவதால், விபத்தில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு வலதுகைக்கு அதிகம். இதனால் தான் இடதுகைப் பெருவிரல் ரேகைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

ஒரு ஆள் வந்தான் அவனுக்கு இடதுகை கட்டைவிரல் இல்லை என்ன ஆச்சு? என்று விசாரித்தார் ஒரு பெரியவர்.

''ஒரு மிஷினில் தவறுதலாக கையை விட்டுவிட்டேன்'' என்றான்.

''நல்லவேளை! வலதுகை கட்டைவிரல் போயிருந்தால் சாப்பிடவே முடியாமல் போயிருக்கும்'' என்றார் பெரியவர்.

''ஆமாம் சேர்! முதலில் வலதுகைதான் மிஷினில் மாட்டிக்கொள்ள இருந்தது. நீங்கள் சொன்ன மாதிரி நானும் யோசித்துப் பார்த்துவிட்டு புத்திசாலித்தனமாக டக்கென்று வலதுகையை இழுத்துக்கொண்டு, இடதுகையைக் கொடுத்து விட்டேன்'' என்றான் அந்த ஆள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கில் தேர்தல் நடாத்த தேவையான புதிய சட்ட மூலத்திற்கு அங்கீகாரம்

வடமாகாணத்தில் தேர்தல் நடாத்துவதற்குத் தேவையான சட்ட மூலம் ஒன்றை இயற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனினால் சமர்ப்பிக்கப்பட்டதாக அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் அனுர பிரிய தர்சன யாப்பா தெரிவித்தார்.

எதிர்பார்த்த மற்றும் எதிர்பாராத காரணங்களுக்காக தேர்தலை நடத்த முடியாமல் போன வடபகுதியில் உள்ள 33 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பு மனுக்களை புதிதாக கோருவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

பெரும்பாலும் அமைதியான சூழ்நிலையில், வடபகுதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடாத்துவதற்கு தேவையான சட்ட மூலம் ஒன்றை தயாரிப்பதே இதன் நோக்கமாகும் என அமைச்சர் அநுர பிரிய தர்சன யாப்பா குறிப்பிட்டார். (ச–3)

# நளினியை விடுதலைசெய்ய முடியாது நீதிமன்றில் தமிழக அரசு அறிவிப்பு

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினியை விடுதலை செய்ய முடியாது என நீதிமன்றில் தமிழக அரசு திட்டவட்டமாக கூறியுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி ஆயுள் தண்டனை கைதியாக சிறையில் இருந்து வருகிறார். தன்னை முன் கூட்டியே விடுதலைசெய்யக் கோரி நளினி சிறைத்துறை ஆணைக் குழுவிடம் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த ஆணைக்குழு மனுவைநிராகரித்ததை தொடர்ந்து தமிழக அரசு நளினியை விடுதலை செய்ய மறுத்துவிட்டது. இதற்கு எதிர்ப்புதெரிவித்து சென்னை உயர் நீதின்றத்தில் மனு தாக்கல் செய்தார். மேலும் ரொபேர்ட் பயாஸ், ஜெயக்குமார், ஆகிய இரு கைதிகளும் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த அனைத்து வழக்குகளும் நீதிபதி நாகமுத்து முன்னிலையில் விசாரணை நடந்து வருகிறது. கடந்த புதன்கிழமை இரு தரப்பு வழக்கறிஞர்களின் வாதம் ஆரம்பமாகியது. நளினி தரப்பில் சட்டத்தரணிகள் ராதா கிருஷ்ணன், துரைசாமி ஆகியோர் ஆஜராகினர். ஜெயக்குமார், ரொபேர்ட் பயாஸ் தரப்பில் மூத்த சட்டத்தரணி பிரசாத் ஆஜரானார். தமிழக அரசு தரப்பில் சட்டத்தரணி ஜெனரல் மாசிலாமணி ஆஜரானார்.

இரண்டாவது நாளாக நேற்று முன்தினமும் சட்டத்தரணிகளின் வாதம் நடைபெற்றது. அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஜெனரல் மாசிலா மணி தனது வாதத்தில் கூறியதாவது, டில்லி பொலிஸ் சிறப்பு சட்டத்தின் கீழ் புலனாய்வு அமைப்பு வழக்கில் தண்டனை பெற்ற கைதிகளை விடுதலை செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு கிடையாது என்ற குற்ற வியல் நடைமுறைச் சட்டம் 435 பிரிவின் கீழ் நளினியை விடுதலை செய்ய முடியாது. மேலும், தடா சட்டம், வெடி குண்டு தடுப்பு சட்டத்தின் கீழும் நளினி தண்டனைக்கு உள் ளாகியுள்ளார்.

இதுபோன்ற விஷயங்களில் அரசு கொள்கைமுடிவு வகுத்துள்ளது. அதன் படி விடுதலைசெய்யக் கோரும் மனுக்களை நிராகரிப்பதும், ஏற்பதும் தனிப்பட்ட விவகார மாகும் எனவே நளினியை விடுதலை செய்ய முடியாது என தனது வாதத் தில் மாசிலாமணி திட்ட வட்டமாக கூறினார். தொடர்ந்து விவாதம் நடைபெற்று வருகிறது.

# புலிகள் அமைப்பில் இன்னும் 3 ஆயிரம் பேரே உள்ளனர்

## கணக்கிடுகிறார் இராணுவத் தளபதி

(கொழும்பு)

போரில் ஒன்றரை வருடங்களாக பின்வாங்கிச் சென்று கொண்டு அதனை தந்திரோபாய நடவடிக்கை என்றுகூற முடியாது. விடுதலைப் புலிகளின் கடைசி நாட்கள் எண்ணப் படுகின்றன என்று இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அனைத்துலக ஊடகமான ரொய்ட்ர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

விடுதலைப்புலிகள் அமைப்பில் உள்ள சுமார் 12ஆயிரம் போராளிகளில் தற்போது 3ஆயிரம் பேரளவிலேயே உள்ளனர். இவர்களும் கடைசி ஆள் வரை நின்று சண்டையிடுவதை விட எப்படியாவது தப்பியோடி விட வேண்டும் என்ற நிலையிலேயே உள்ளனர்.

அரச படைகள் கட்டம் கட்டமாக புலிகளை அழித்து முற்றாக - நிறைவான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். ஈராக் போல வேகமாக சென்று தீர்வுகாணும் ஆதங்கத்தில் நடவடிக்கையை மேற்கொண்டுவிட்டுஈற்றில் படையினரை புலிகளின் தந்திரோபாய நடவடிக்கைகளுக்குபலி கொடுக்கக்கூடாது.

தற்போது புலிகளின் கோட்டையான கிளிநொச்சியை எமது படைகள் நெருங்கி விட்டன. அங்கு நேரடி மோதல்கள்இடம் பெற்று வருகின்றன. புலிகள் அமைப்பில் கொல்லப்படுபவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவுள்ளது. இதே இழப்பு வீச்சில் அவர்களால் நெடுங்காலம் நின்றுபிடிக்க முடியாது.

தற்போது புலிகள் அமைப்பில் உள்ள 3 ஆயிரம் பேரும் கடைசி ஆள் வரை நின்று சமரிடப் போவதில்லை. அரச படையினரின் நடவடிக்கைக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஒரு கட்டத்தில் மக்களோடு மக்களாக கலந்து விடுவார்கள் அல்லது தற்போது கிழக்கில் ஆங்காங்கே முயற்சிகளைமேற் கொள்வது போன்று மாற்று உபாயத்தினை நாடுவர்.

ஆனால் புலிகளை எப்போது முற்றாக எமது படைகள் அழித்தொழிக்கும் என்ற காலக்கெடு எதனையும் வழங்க விரும்பவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

இதனைக் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய இராணுவத் தளபதி விடுதலைப் புலிகள் அமைப்பில் 4 ஆயிரம் பேரே இருப்பதாக தெரிவித்திருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராசி பலன்

20.09.2008
(புரட்டாதி 04, சனிக்கிழமை)
பஞ்சமி காலை 07.01மணிவரை
கார்த்திகை முன்னிரவு 06.41மணிவரை
ஷஷ்டி பின்னிரவு 4.40 மணிவரை
இராகுகாலம்–09.03-10.32 மணிவரை
சுபநேரம்–03.02-04.32 மணிவரை
கார்த்திகை விரதம்

| | |
|---|---|
| மேடம் | போசனசுகக்குறைவு, வீண் விவாதம், காரிய தாமதம், பெரியோர் வெறுப்பு. |
| இடபம் | போசனசுகம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், சயன சுகம். |
| மிதுனம் | அமைதிக்குறைவு, நல்ல முயற்சி, திடீர் பயணம், சுப செலவு. |
| கடகம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, மனமகிழ்ச்சி, பெருமையடைதல். |
| சிங்கம் | கடினமுயற்சி, சுபசெய்தி, பிறர் உதவி, உடல் நலம். |
| கன்னி | புதிய திட்டமிடல், ஆரோக்கியக் குறைவு, பொருள்விரயம், கட்டுப்பாடு. |
| துலாம் | முழங்கால் வலி, காரிய தடங்கல், பொருள் விரயம், வீண் பகை. |
| விருச்சிகம் | உறவினர் உதவி, களஸ்திர நன்மை, முயற்சி கைகூடும், பிரயாண நன்மை. |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், தேகநலன், சுப நிகழ்வு, போசன சுகம். |
| மகரம் | பணக்குறைவு, புத்திரரால் கவலை, சிறுவியாதி, முயற்சி தாமதம். |
| கும்பம் | பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், ரோகநிலை, தாய்வழி உறவு. |
| மீனம் | சகோதரர் உதவி, கூட்டு முயற்சி, இனிய சம்பவம், வாக்கு மேன்மை. |

வளவன்

# புலிகளின் விஷவாயுத் தாக்குதலில் இருந்து தப்புவதற்கு படையினருக்கு முகமூடிகள்!

## பிரிகேடியர் உதய நாணயக்காரா தகவல்

(கொழும்பு)



கிளிநொச்சிப் பிரதேசத்தில் படையினர்மீது புலிகள் மேற்கொள்ளும் சீ.எப் விஷவாயு கிரனைட் குண்டுத் தாக்குதலில்இருந்து தப்பிக் கொள்வதற்காக பாதுகாப்பு முன்னரங்கில் உள்ள படைவீரர்களுக்கு முகமூடிகள் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர்பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி யொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர்இவ்வாறு கூறினார். இங்கு பிரிகேடியர்மேலும் கூறியதாவது,

புலிகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை பணயக்கைதிகளை மீட்கும் நடவடிக்கைகளின்போது இராணுவத்தினர் பயன்படுத்தும் சீ.எப் விஷவாயு வைக்கக்கும் கிரனைட் குண்டுகளையே அவர்கள் பயன்படுத்தியுள்ளதாக ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கிளிநொச்சிஅக்கராயன் குளம் பகுதியில் இடம் பெற்றஇரு தரப்பு மோதல்களின்போது புலிகள்அந்த விஷ வாயுவைப் பயன்படுத்தி யுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட 6 இராணுவ வீரர்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர்படையணிகளுக்குத்திரும்பியுள்ளனர்.

புலிகளிடம் இருந்து வரும் எந்த வகையான தாக்குதல் களையும் முறியடிக்கஅரசாங்கம்உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் பிரிகேடியர் மேலும் தெரிவித்தார். (ச–5)

# களனிப் பல்கலைக்கழக மாணவர்களிடையே மோதல்

களனி பல்கலைக்கழகத்தில் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் நேற்று முன் தினம் முற்பகல் மோதல் இடம்பெற்றுள்ளது. விஞ்ஞானம் மற்றும் கலைப்பீடங்களைச் சேர்ந்த மாணவர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட இந்த மோதலில் மாணவர் ஒருவர் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

சுமார் 500 மாணவர்கள் இந்த மோதலுடன் தொடர்புபட்டிருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டார். இந்த அம்சம் தொடர்பாக மாணவர் ஒரு வரும் விஞ்ஞானபீடத்தின் தற்காலிக உதவி விரிவுரையாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு கோரி மாணவர்கள் கற்களால் தாக்கியதை அடுத்து கண்ணீர்புகைப் பிரயோகம் மேற்கொள்ள நேரிட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ச–3)

# இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சர் திஸிபி லிவ்னி பிரதமராக வாய்ப்பு

இஸ்ரேலிய ஆளுங்கட்சியின் தலைவராக வெளிநாட்டு அமைச்சர் திஸிபி லிவ்னி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் அவர் எஹுட் ஒல்மேர்ட்டிற்கு பின் அந்நாட்டின் பிரதமராகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

மேற்படி கட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட போக்குவரத்து அமைச்சர் சாவுல்மொபாஸை விட 1.1 சதவீத வாக்குகளால் 431 வாக்குகள்) மட்டுமே திஸிபி லிவ்னி முன்னிலையில் உள்ளதாக அந்நாட்டு மத்திய தேர்தல் ஆணையகம் தெரிவிக்கிறது.

கட்சித் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதையடுத்து திபிஸி லிவ்னி உரையாற்றுகையில், இஸ்ரேல் எதிர்கொண்டுள்ள மோசமான அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்கத் தயாராகும் வகையில், புதிய அமைச்சரவையை விரைவில் ஸ்தாபிக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த வாக்கெடுப்பில் லிவ்னி 43.1 சதவீத வாக்குகளையும், சாவுல் மொபாஸ் 42 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

அதேசமயம் ஏனைய இரு வேட்பாளராக மெயீர் ஷீட்ரித் மற்றும் ஷின் பெட் ஆகியோர் முறையே 8.4 சதவீத மற்றும் 6.5 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளனர். எதிர்வரும் 6 வார காலப் பகுதிக்குள் திஸிபி லிவ்னி புதிய கூட்டமைப்பு அரசாங்க மொன்றை ஸ்தாபிக்கும் பட்சத்தில், 1974ஆம் ஆண்டுக்குப் பின்னரான அந்நாட்டின் முதலாவது பெண் பிரதமர் என்ற பெருமையை அவர் பெறுவார்.

குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் புதிய அரசாங்கத்தை ஸ்தாபிக்க அவர் தவறும் பட்சத்தில், அதற்கு மூன்று மாதங்களில் பொதுத் தேர்தலொன்றை அவர் எதிர்கொள்ள நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், எஹுட் ஒல்மேர்ட் இன்னும் 41 நாட்கள் மட்டுமே பிரதமராக சேவையாற்றவுள்ளார். பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக அழுத்தத்திற்கு உள்ளான எஹுட் ஒல் மேர்ட், கடந்த ஜுலை மாதம் பதவி விலகுவதாக அறிவித்தார்.

எஹுட் ஒல்மேர்ட், தனது கட்சியின் புதிய தலைவரான திஸிபி லிவ்னிக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதுடன், அவருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தான் தயாராக இருப்பதாக கூறியுள்ளார்.

அதேசமயம், சாவுல் மொபாஸின் ஆதரவாளர்கள், மேற்படி வாக்கெடுப்புபெறுபெறுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக அச்சுறுத்தல்விடுத்துள்ளனர்.



தென் பிராந்திய நகரான அஷ்கெலானில் இடம்பெற்ற வாக்கெடுப்பு முறையற்ற விதத்தில் நடைபெற்றுள்ளதாக அவர்கள் குற்றஞ் சாட்டினர். லிவ்னிக்கு அரசியல் அனு பவம் போதாது என அவரது எதிராளிகள் தெரிவிக்கின்றனர். (அ-6)

## இலங்கையர் ஒருவர் ஜம்முவில் கைது

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில், இலங்கையர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் முஸ்லிம் இனத்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இணையத்தள அகம் ஒன்றின் உரிமையாளர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் தான் இவர் ஜம்முவிற்குச் சென்றுள்ளார். போராளிகள் தொடர்பான இணையத்தளம் ஒன்றிணைப்பார்த்துக் கொண்டிருந்தபோது குறித்த இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் கைதுசெய்யப்படும் போது தமது கடவுச்சீட்டைச் சமர்ப்பிக்கவில்லை என ஜம்மு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-6)

## அமெரிக்க இராணுவ செலவுக்காக 54 ஆயிரம் கோடி டொலர் ஒதுக்கீடு

### செனட் ஒப்புதல்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் இராணுவ செலவுகளுக்காக அடுத்த ஆண்டுக்கு 54 ஆயிரம் கோடி டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஒதுக்கீடுக்கு அமெரிக்க செனட் ஒப்புதல் அளித்துள்ளது.

ஈராக் போருக்கு

உலகிலேயே மிகப் பெரிய இராணுவம் அமெரிக்காவிடம் தான் உள்ளது. இந்த இராணுவத்துக்காக ஒவ்வொரு ஆண்டும் கோடி கோடியாக பணம் ஒதுக்கப்படுகிறது. அடுத்த ஆண்டுக்காக இராணுவச் செலவுக்காக 54 ஆயிரம் கோடி டொலர் ஒருக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீடு ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளில் நடந்து வரும் இராணுவ நடவடிக்கைக்காக ஒதுக்கப்பட்ட தொகையையும் உள்ளடக்கியது ஆகும்.

இந்த ஒதுக்கீட்டுக்கு அமெரிக்க பாராளுமன்றத்தின் மேல்சபையான செனட் ஒப்புதல் அளித்துள்ளது. சபையில் ஆஜராகி இருந்த உறுப்பினர்களில் 88பேர் ஆதரவு தெரிவித்தனர். 8பேர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இராணுவ தளபாடங்கள், ஆயுதங்கள் கொள்முதலுக்காக ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கேட்டு இருந்ததைவிட அதிகமாக இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஈராக்கில் மறுசீரமைப்பு பணிகளுக்கும் கணிசமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. (அ-6)

## வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக விநோத ஆர்ப்பாட்டம்

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளால்மனமுடைந்த நபர் ஒருவர் தலை கீழாக தொங்கி விநோத ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்ட சம்பவம் லண்டனில் இடம்பெற்றுள்ளது.



வடமேற்கு லண்டனிலுள்ள ஹரோவைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தரான ஹெர் பேர்ட் குரொஸ்மான் (60 வயது) திரபல்கார் சதுக்கத்தில் பாரந்தூக்கியொன்றில் கட்டப்பட்ட கயிற்றில் இரு மணித்தியாலங்கள் தலை கீழாக தொங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

அத்துடன் பிரித்தானிய மக்களின் பணம் எவ்வாறு உறிஞ்சப்படுகிறதுஎன்பதை காண்பிக்கும் வகையில்தனது காற்சட்டைப் பையிலிருந்த நாணயங்களை நிலத்திலிருந்த மூன்று கொள்கலன்களில் அவர் விழவிட்டார்.

ஒரு கொள்கலம் அரசாங்கத்திற்கு செல்லும் பணத்தையும் இரண்டாவது கொள்கலம் பாவனைக் கட்டணங்களுக்கு செலுத்தப்படும் பணத்தையும் மூன்றாவது கொள்கலம் சொந்த தேவைக்காக உபயோகிக்கப்படும் பணத்தையும்குறிப்பதாக அவர் கூறினார்.

"எமது பணத்தை அரசாங்கம் வீணடித்துக் கொண்டிருக்கிறது"எனஅவர் குற்றஞ்சாட்டினார்.

## புதிய கருத்துக்கணிப்பில் 2 சதவீத வாக்குகளால் மக்கெயினை விட பராக் ஒபாமா முன்னிலையில்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பராக் ஒபாமா அவரது போட்டியாளரான குடியரசுக் கட்சி வேட்பாளர் ஜோன் மக்கெயினை விட 2சதவீதவாக்குகளால் முன்னிலையில் இருப்பதாக பிந்திய கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்று கூறுகிறது.



குடியரசுக் கட்சியின் உப ஜனாதிபதி வேட்பாளராக சாரா பாலினை ஜோன் மக்கென் நியமித்ததையடுத்து அவருக்கான ஆதரவு அதிகரித்து வந்த நிலையிலேயே இந்த திடீர் விழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

"ராய்ட்டர்ஸ்/ஸொக்பி" ஆல் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பின் பெறுபேறுகள் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டன. இந்த வாக்கெடுப்பில் ஒபாமா 47சதவீத வாக்குகளையும் மக்கெயின் 45 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளனர். (அ)

## அமெரிக்க-இந்திய அணுசக்தி ஒப்பந்தத்தை அனுமதிக்க கூடாது

### அணு ஆயுத பரவல் தடுப்பு நிபுணர்கள் கோரிக்கை

அணுசக்தி ஒப்பந்தத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமலேயே தள்ளுபடி செய்ய வேண்டுமென்று அணு ஆயுத பரவல் தடுப்பு நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவிற்கும்அமெரிக்காவிற்கும் இடையே அணு சக்திஒப்பந்தம் கடந்த 2005 ஆண்டு கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்திற்கு இந்தியாவால் பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.க. மற்றும் இடது சாரி கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இந்த ஒப்பந்தத்திற்கு சர்வதேச அணுசக்தி கழகம் ஏற்கனவே அனுமதி வழங்கிவிட்டது. இதேபோல அணு எரிபொருளை வழங்கும், செய்யும் என்.எஸ்.ஜி அமைப்பில் உள்ள 45 நாடுகளும் இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளன.

இந் நிலையில்இந்த ஒப்பந்தம் அமெரிக்க பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மீது அமெரிக்க பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டு அதன் பிறகு அங்கீகாரம் வழங்கப்படும்.

அமெரிக்க பாராளுமன்ற கூட்டத் தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறுகிறது. அதற்குள் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும்.

அப்படி26ஆம் திகதிக்குள் இந்த ஒப்பந்தம் நிறைவேறாவிட்டால் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்குபிறகு நவம்பர் மாதம் கூடும் அமெரிக்க பாராளுமன்ற கூட்டத் தொடரின் போது நிறைவேற்றப்படலாம் என்று கூறப்படுகிறது.

இருந்தாலும்இந்த ஒப்பந்தத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளாமலேயே தள்ளுபடிசெய்ய வேண்டும் என்றுஅணு ஆயுத பரவல் தடுப்பு நிபுணர்கள் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சுக்குகோரிக்கை விடுத்துள்ளனர்.

அணுஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாததால்இந்த ஒப்பந்தத்தை அனுமதிக்க கூடாது நிறைவேற்றவும் கூடாது என்றும் அந்த நிபுணர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (அ-6)

## மெக்சிகோ சிறையில் கலவரம் 19கைதிகள் பலி

(மெக்சிகோ சிட்டி)

அமெரிக்கா அருகே உள்ள மெக்சிகோ நாட்டில் டிஜுவானா நகரில் உள்ள சிறையில் கலவரம் ஏற்பட்டது. இதில் 19 கைதிகள் பலியானார்கள். 12 பேர் காயம் அடைந்தனர். சிறையில் இருந்த அதிபயங்கர கைதிகளான 200 பேர் வேறு சில சிறைகளுக்கு மாற்றப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இதே சிறையில் கைதிகளுக்கும், சிறைக்காவலர்களுக்கும் இடையே நடந்த மோதலில் 4கைதிகள் பலியானார்கள். (அ-6)

## வருடந்தோறும் 10இலட்சம் பேர் மலேரியா நோய்க்குப் பலி!

### உலக சுகாதார நிறுவனம் அறிவிப்பு

வருடந்தோறும் உலகளாவிய ரீதியில் பத்து இலட்சம் பேர் மலேரியா நோயினால் மரணிப்பதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்நிறுவனம் வருடாந்தம் வெளியிடும் அறிக்கையிலேயே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

மலேரியாவை பரவச் செய்யும் நுளம்புகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் முன்னேற்றம் காணப்பட்டாலும் இன்னமும் மலேரியா நோய் காரணமாக நாளொன்றுக்கு 2700 பேர் பலியாகும் நிலை காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகில் இந்த நோய்க்கு இலக்காகும் மக்கள் அதிகம் உள்ள பிரதேசம் ஆபிரிக்கா எனவும் இங்குள்ள இளம் சிறார்களே அதிகளவில் இந்நோயினால் பீடிக்கப்படுகிறார்கள் எனவும் உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

வருடத்துக்கு ஒரு பில்லியன் டொலர்களுக்கும் மேலாக மலேரியா நோய் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு செலவு செய்யப்படுவதாகவும் அந்தத் தொகையை மும்மடங்காக அதிகரிக்கப்பட வேண்டும் என தாம் விரும்புவதாகவும் உலக சுகாதார நிறுவனம் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-6)

## ஆற்றில் பஸ் கவிழ்ந்து 12 பேர் பலி


நேபாள தலைநகர் காத்மண்ட் அருகே ஆற்றில் பஸ் ஒன்று கவிழ்ந்து விபத்துக் குள்ளானதில் அதில் பயணம் செய்த 12 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த விபத்தில் மேலும் 6 பேர் படுகாயமடைந்தனர்.

நேபாளத்தில் உள்ள தாடிங் மாவட்டத்தில் நேற்றுக் காலை பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. பிர்குஞ்ச் என்ற இடத்தில் இருந்து காத்மண்ட் நோக்கி சென்று கொண்டிருந்த அந்த பஸ், கட்டுப்பாட்டை இழந்து ஆற்றில் கவிழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

### உலக தரிசனம்

இந்த விபத்தில் 12பேர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும், மேலும் 6 பேர் படுகாய மடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)


# நோத் முதல் கோபல்லவா வரை (104)



முன்னர் வேல்ஸ் இளவரசாக இலங்கைக்கு வந்த காலத்தில் அண்டர்சனும் உடன் வந்தவர். வெளிநாடுகளிலும் உள்நாட்டு அரசாங்கத்திலும் பொறுப்பு வாய்ந்த மேல் உத்தியோகங்களை வகித்து அனுபவம் பெற்ற அண்டர்சன், இலங்கைக்கு ஆள்பதியாய் வந்தமை வரவேற்கப்படக்கூடியதே என்றனர்.

### முதலாம் மகா யுத்த காலம்

அவற்றோடு ஜேர்மனிய ஒற்றர்கள் பௌத்த பிக்குகள் உடையில் உலாவுகிறார்கள் என்றும் அவர்கள் பிரித்தானியர் ஆட்சியை அகற்றுவதற்காகச் சதி செய்கிறார்கள் என்றும் வதந்தி பரவிற்று. அதைப்பற்றிப் பிரித்தானிய பாராளுமன்றத்தில் கேள்வி கேட்கப்பட்டபோது "இலங்கையில் ஏற் பட்ட கலவரம் ஜேர்மனியரின் தூண்டுதலால் ஏற்பட்டதாகலாம்" என்று கௌரவ மந்திரியார் பதிலளித்தார்.



டி.எஸ்.சேனநாயக்க சுதந்திர இலங்கையின் முதலாவது பிரமதராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.(1947செப்டெம்பர் 26)

கலகக்காரரிடம் துப்பாக்கிமுதல் குண்டுகளீறாகப் பல வித ஆயுதங்கள் தயாராக இருந்தன என ஆள்பதி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதும், அவர் எதனையும் ஆலோசியாமல் உடனடியாக இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தி விட்டுப் படைத் தலைவன் பிரிகேடியர் ஜெனறல் மக்கொம் என்பவரிடம் முழுப் பொறுப்பையும் ஒப்புவித்தார். படைத்தலைவனும் நிலைமை மிகவும் ஆபத்தானது எனக் கூறிப் பொறுப்பேற்றுக் கொண்டான்.

இராணுவ ஆட்சியில் படைகள் செய்த அட்டூழியங்களை எழுதிக்கொள்ளவியலாது. ஆண்களும் பெண்களுமாகிய பொதுமக்கள் காரணமின்றிக் கைது செய்யப்பட்டார்கள். அரசியல் சமூகசேவை,

**மீள் பார்வை**

தேசிய சேவை,மதுவொளிப்பு ஆகியவற்றில் தொண்டு செய்த பெரியார்கள் எல்லோரும் காரணமின்றிக் கைது செய்யப்பட்டார்கள். சந்தேகத்தின் பேரிலும், முஸ்லிம்கள் குறிப்பிட்ட வண்ணமும் பெரியார்கள் சிறையில் தள்ளப்பட்டார்கள். உண்மை,நேர்மை, நல்லியல்பு என்பன மக்களைப் பாதுகாக்க இயலாது போயின. பஞ்சாப்பிய படைகள் செய்த துட்டச் செயல்கள் வரலாற்றில் காணப்படாத வகையில் அடாத செயல்களாயிருந்தன.

முன்னர் 1818 ஆம் ஆண்டிலும்,பின்னர் 1848 ஆம் ஆண்டிலும் சிங்கள மக்கள் பட்ட துன்பியல் நிகழ்ச்சிகளை விட 1915 ஆம் ஆண்டின் நிகழ்ச்சிகள் அதிக பயங்கரமாகவும்,வெகு குரூரமாகவுமிருந்தன. ஆள்பதி அவர்கள் பிரகடனஞ் செய்த இராணுவ ஆட்சி மத்திய மாகாணம், வடமேல் மாகாணம், மேல் மாகாணம்,தென்மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் ஆகிய பிரதேசங்களில் நிலவிற்று.

எல்லாமாக 105 நாட்கள் வரையில் நிலவிய பயங்கரவாட்சியின் சரித்திரம் சேர் இராமநாதன் அவர்களாலும், ஆமண்டி சூசா அவர்களாலும் தனித்தனி நூல்களாக எழுதப்பட்டுள்ளன. யூன் மாதம் இரண்டாம் திகதி ஆரம்பித்த இராணுவ ஆட்சி செப்ரெம்பர் இருபத்தைந்தாம் நாள் வரை நடைபெற்றது.

மதுவொழிப்புப் பிரசாரத்தில் தீவிரமாயுழைத்த திரு.D.S. சேனநாயக அவர்களும் கலகத்தைத் தூண்டியவர்களில் ஒருவர் எனக் கைது செய்யப்பட்டு 40 நாட்களுக்கு மேலாகச் சிறையிலடைக்கப்பட்டு விடுதலையளிக்கப்பட்டார்.


குடியேற்ற நாட்டு மந்திரியாரால் ஆள்பதி சாமேஸ் அவர்கள் திருப்பி அழைக்கப் பட்டதும்,சமாதானப் பிரியரான சேர். யோண் அண்டர்சன் அவர்கள் ஆள்பதியாக நியமனம் பெற்று 15.4.1916 இல் இலங்கைக்கு வந்தார். அவர் சர்வகலாசாலைப் பரீட்சார்த்திகளுள் மிகத் திறமையாகச் சித்தியெய்தியமைக்காகத் தங்கப் பதக்கம் பரிசில் பெற்ற படிப்பாளி. குடியேற்ற மந்திரியாரின் காரியாலயத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து குடியேற்ற நாடுகளின் பரிபாலன அலுவல்களிற் போதிய அனுபவமும் முன்னறிவும் பெற்றவர். பிரித்தானியப் பேரரசின் பல நாடுகளுக்கு அரசாங்கத்தின் பிரதியாளராய்ச் சென்று ஆங்காங்குள்ள பிணக்குகள் பலவற்றைத் தீர்த்து வைத்தவர். மாட்சிமை தங்கிய ஐந்தாம் யோச் மன்னர் அவர்கள்,

**க.சி.குலரத்தினம்**

அண்டர்சன் ஆட்சிப் பொறுப்பேற்றதும், இலங்கையில் கலவர காலத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் தகவல் சம்பந்தமான ஏடுகளைப் பரிசீலனை செய்வதில் முதலில் முனைந்தார்.

சின்னஞ் சிறிய குற்றத்துக் காகப் பென்னம் பெரிய மனிதர்கள் சிறையில் அடைக்கப்பட்டதையும், ஆதாரமற்ற கோள் குண்டணிகளைக் கேட்டுப் பெரியவர்கள் சிறையிடப்பட்டதையுங்கண்டு வருந்தி அவர்களுள் 800 பேருக்கு மன்னரின் பிறந்தநாள் விழா வைபவத்தைச் சாட்டிப் பொது மன்னிப்பளித்து விடுதலை வழங்கினார். (தொடரும்)





அண்மையில் நடைபெற்ற மாகாணமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்ட அணியினருடன் அதிபர், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் மற்றும் பயிற்றுவிப்பாளர்களை முதலாவது படத்திலும், மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றிபெற்ற வீர வீராங்கனைகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தொல்லியல் நோக்கில் (10)

# கந்தரோடையும் கதிரமலையும்

கந்தரோடையின் ஆய்வில் காணப்பட்ட மற்றுமொரு முக்கிய அம்சம் பெருங்கற் கால கறுப்பு -சிவப்பு மட்பாண்டங்களுடன் மங்கிய நிலையில் உரோம் மட்கலன்களும் நாணயங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகும். இவை தமிழ் நாட்டிலுள்ள அரிக்கமேட்டில் மோட்டிமர்வீலர் மேற்கொண்ட ஆய்வின் போது கிடைத்த சான்றுகளை நினைவுபடுத்துகின்றன.இச் சான்றுகள் அனைத்தும் எவ்வாறு இலங்கையின் புராதனஇராசதானிகளாக இருந்த மகாகமை, அநுராதபுரம் என்பவை பெருங்கற்காலப் பண்பாட்டுப் பரவலோடு ஏற்பட்ட மாறுதல்களின் பின்னணியில் நகரமயமாக்கத்திற்கு உட்பட்டதோ அப்படியே கந்தரோடையும் வட இலங்கையின் புராதன தலைநகரங்களில் ஒன்றாகத் தோன்றியதைக் காட்டுகின்றன.

### தமிழ் அரச உருவாக்கமும் கந்தரோடையும்

இலங்கைத் தமிழரின்அரசியல் வரலாற்றை ஆராய்ந்த பலரும் பண்டைய காலத்தில் இலங்கையில் ஆட்சிபுரிந்த தமிழ் மன்னர்கள் அனைவரும் தமிழகத்திலிருந்து படையெடுத்து வந்தவர்கள் எனக் கூறுகின்றனர். இதன்மூலம் இலங்கைத் தமிழரிடையே பண்டைய காலத்தில் சுதேச அரசமரபு தோன்றவில்லை என்ற கருத்து வற்புறுத்தப்படுகிறது. ஆனால் இதுவரை கிடைத்த கல்வெட்டுக்களையும் , நாணயங்களையும் வைத்து நோக்கும்போது தமிழ் நாட்டில் சங்ககாலத்திற்கு இணையாக இலங்கையிலும் தமிழ் அரச மரபு தோன்றிய வரலாற்றைக் காணமுடிகின்றது தமிழக அரச உருவாக்கம் பற்றி ஆராய்ந்த பலரும் அவற்றின் தோற்றத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டுப் பின்னணியில் நோக்கியிருப்பதைக் காணமுடிகிறது. இலங்கையில் கூட இப்பண்பாட்டு மையங்களை அண்டிக் காணப்பட்ட இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்களில் அரச உருவாக்கம் பற்றிய சான்றுகள் காணப்படுவதால் இது இலங்கைக்குப் பொருந்தும் என்பதில் சந்தேகமில்லை. பண்டையகால அரசுகள் பற்றி ஆராய்ந்த பேராசிரியர் குணவர்த்தன 260 இற்கு மேற்பட்ட இடங்களில் சிற்றரசுகள் இருந்தன என்பதற்கு கல்வெட்டுக்களில் வரும் ராஜா, மஹாராஜா, ஹமணி போன்ற பட்டப் பெயர்களைச் சான்றாகக் காட்டுகிறார். இப்பட்டப் பெயருக்குரியவர்கள் இனக்குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக ஆட்சி புரிந்த குறுநிலத் தலைவர்களாக, சிற்றரசர்களாக, குருசில்களாகக் கொள்ளலாம். இப்பட்டப் பெயர்கள் பிராகிருத மொழியில் அமைந்திருப்பதால் இவற்றைச் சிங்கள அரச உருவாக்கத்தின் முன்னோடி வடிவங்களாகக் கருதப்பட முடிகிறது.

மேற் கூறப்பட்ட கல்வெட்டுக்களில் பிராகிருத மொழிக்குரிய பட்டப் பெயர்கள் மட்டுமன்றி தமிழ் மொழிக்குரிய பருமகன், பருமக, பருமகள், வேள் போன்ற பட்டங்களும் காணப்படுகின்றன.இதில் பருமகன், பருமக என்ற பட்டம் சங்க இலக்கியத்தில் வரும் பெருமகன் என்ற பட்டத்தைக் குறிப்பதாகும். சில கல்வெட்டுக்களில் வரும் பெயரின் முடிவு மகன் மான் என முடிவுறுகிறது. அரசு ஏற்படுவதற்கு முற்பட்ட நிலையிலிருந்து அரச சமூகத்திற்கு மாறும் தமிழகத்தை ஆய்வு செய்த செனிவிரட்ண ஒரு நிலைக்கு உட்பட்ட இடத்தில் தங்கும் குடும்பக் குழுக்களில் அக்குழுவின் தலைவன் வழிவரும் மகன் பெருமகன் என்ற சிறப்புப் பெறுவதும் அதன டிப்படையில் தலைவன் பெருமகன் என அழைக்கப்படுவதும் இயல்பு என்றார். சங்க இலக்கியங்களில் ஓரி கொற்றன், பெருமான், பெருமகன், பேகன், எருமை ஆகியோரின் பெயர்களின் பின்னொட்டுச் சொல்லாக இது வருகிறது. இதில் வரும் பெருமகன் என்ற சொல் பெருமான் என மாறுகிறது.இச் சொல் அண்மை விளியாக பெருமக எனப்பட்டது. இவ்வாறான அதிகார அடுக்கு நிலை இலங்கையிலும் ஏற்பட்டிருக்கலாம் என்பதைக் கல்வெட்டுக்களில் வரும் மருமகன், மருமான் என்ற பெயரின் இறுதியில் வரும் மகன், மான் என்ற அடைமொழிகள் கோடிட்டுக் காட்டுகின்றன.



2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் நாணயம்

வேள் என்ற பட்டம் ஓர் இனக்குழுவுக்குரிய பெயராகப் பார்க்கப்பட்டாலும் ஆரம்ப காலங்களில் குறிப்பிட்ட இனக் குழுக்களிடையே தோன்றி வலிமை மிக்க தலைவனுக்குரிய பட்டமாகவே அது இருந்துள்ளது. வட மொழியில் ராஜா என்ற சொல்லுக்கு என்னென்ன பொருள் உண்டோ அதே பொருளையே வேள் என்ற பட்டமும் கொண்டுள்ளது.இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் வேள் என்ற பட்டத்தை உடையவனின் சமூக நிலை பெருமளவுக்கு தமிழக பிராமிக் கல்வெட்டுக்கள் , சங்க இலக்கியம் என்பவற்றில் வரும் வேள் , வேளரின் சமூக நிலையோடு ஒற்றுமை கொண்டு காணப்படுகிறது. மேலும் பிராகிருத மொழிக்குரிய இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் ராசா , ராசே எனவும் எழுதப்பட்டுள்ளன. இது தமிழ் அரச மரபு இருந்ததற்கு மேலும் ஒரு சான்றாகும்.

அண்மையில் தென்னிலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய நாண யங்களில் பிராகிருதப் பெயர்க ளுடன் உதிரன், தஸபிஜன், மகா சாத்தஅன்,கபதிகஜபறஅன் போன்ற தமிழ்ப் பெயர்களும் பெறப்பட்டுள் ளன.

இவ் வகையான நாணயங்கள் தமிழகத்தில் வெளியிடப்பட்டதற்கு இதுவரை எந்தச் சான்றும் கிடைக்கவில்லை. இதனால் இவற்றை இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ்ச் சிற்றரசர்கள் அல்லது சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற தலைவர்கள் வெளியிட்டிருப்பார்கள் என உறுதியாகக் கூறலாம். இங்கு கிடைத்த இன்னொரு நாணயத்தில் திஸ புரசடநாக ராசன் என்ற பெயர் காணப்படுகிறது.

**வரலாற்றுத் துறைப் பேராசிரியர்**
**ப. புஷ்பரட்ணம்**

பிராமிக கல்வெட்டுக்களில் வரும் ராசா என்ற பட்டப் பெயரையும் ,சமகால நாணயத்தில் வரும் ராசன் என்ற பட்டத்தையும் ஒப்பிடும் போது சுதேச அரச மரபிலிருந்து வந்த தமிழ்ச் சிற்றரசர்களே இந் நாணயங்களை வெளியிட்டிருப்பார்கள் என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது. (தொடரும்)

# உலக சந்தையில் எரிபொருள் விலை வீழ்ச்சி; அரசுக்கு, லீற்றருக்கு ரூபா. 100 வருமானம்

## அரசு கொள்ளையடிப்பதாக,ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

உலக சந்தையில் தற்போதைய எரிபொருள் விலைகளுக்கு அமைய சகல வரி விதிப்புகளுடன் பெற்றோல் லீற்றர் ஒன்றை 91.50 சதத்திற்கும், டீசலை 77 ரூபாவுக்கும் வழங்க முடியும் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை வீழ்ச்சியின் பயனை உடனடியாக மக்களுக்கு பெற்று கொடுக்க வேண்டும் என அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துரைத்த அவர் எரி பொருள் விலை அதிகரிப்பின் நிவாரணத்தை மக்களுக்கு வழங்குவதை அரசாங்கம் ஏன் தாமதப்படுத்தி வருகிறது என கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த நிலையில் மக்களின் பணத்தை கொள்ளையிடும் அரசாங்கம் எதிர்வரும் வரவு செலவு திட்டத்தின் மூலம் எரிபொருள் விலை குறைத்துள்ளதாக காண்பிக்க முயற்சித்து வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

எரிபொருள் விலை குறைந்துள்ளதால் எரிபொருள் லீற்றர் ஒன்றின் மூலம் அரசாங்கத்திற்கு 100 ரூபா வரை வருமானம் கிடைப்பதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ-6)

# அமைதி தேடி செபமாலைப் பேரணி

(யாழ்ப்பாணம்)

பன்னாட்டு சமாதான நாளாகிய நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.மறை மாவட்ட, நீதி சமாதானத்திற்கான ஆணையம் அமைதி தேடி சமாதானப் பேரணியினை ஒழுங்கு செய்துள்ளது. அதன் பிரகாரம் ஞாயிறு அன்று காலை 7.15 மணிக்கு சகல கத்தோலிக்க ஆலயங்களிலுமிருந்து பேரணி புறப்பட்டு மானிப்பாய் தூய அந்தோனியார் ஆலயத்தை வந்தடையும். அங்கு அமைதி, நிறைவான நின்மதி, நிரந்தரமாக வேண்டுமென்று இறைவனிற்கு அபயக்குரல் எழுப்பும் கூட்டு வழிபாடு இடம்பெறவுள்ளதாக யாழ்.ஆயர் இல்ல அருள்பணி அ.பி.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார். (ஓ)

# திருகோணமலை மாணவர் படுகொலை வழக்கு விசாரணை முடிவடைந்துள்ளது

## விரைவில், ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்!

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த விசாரணை ஆணைக்குழு இறுதி அறிக்கையைத் தயாரித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை மற்றும் யோசனைகள் என்பன விரைவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையில் 5மாணவர்கள் படுகொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் நிசங்க உதலாகம தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, உயிரிழந்த மாணவர்களின் பெற்றோர் மற்றும் சிவில் அமைப்புக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணைகளின்போது கடற்படை, பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் சிவிலியன்கள் உள்ளிட்ட 38சாட்சியாளர்கள் சாட்சியமளித்ததாக, அவர் தெரிவித்துள்ளார்.

கெபிற்றிக்கொல்லாவ பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் அடுத்தவாரமளவில் ஆரம்பிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2006ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 15ஆம் திகதி அனுராதபுரம் கெபிற்றிக்கொல்லாவ பிரதேசத்தில் இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் 68பயணிகள் உயிரிழுந்தனர். (அ-6)

# சிறைச்சாலையில் முஸ்லிம் கைதி பொலிஸாரால் படுகொலை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மொனராகலை சிறைச்சாலையில் வைத்து பொலிஸாரால் முஸ்லிம் கைதியொருவர் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

பொலிஸாரல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் களின் காரணமாக ச்லீம் என்ற27 வயது கைதி உயிரிழந்துள்ளார். சுகவீனமுற்ற கைதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந் துள்தாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-6)

# கசிப்பு விற்பனை செய்த நபருக்கு கடூழியச் சிறையும் அபராதமும்

(பருத்தித்துறை)

கசிப்பு விற்பனை செய்த நபரொருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 1 இலட்சத்து 15ஆயிரம் ரூபா அபராதமும் 1 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தது.

துன்னாலை வீடொன்றில் திடீர்ச் சோதனைகளை மேற்கொண்ட பருத்தித்துறை மதுவரி பகுதி திடீர்ப் பரிசோதனைக் குழுவிடமே இக்கசிப்பு விற்பனையாளர் கசிப்பு கோடா கசிப்பு உற்பத்தி உபகரணங்களுடன் அகப்பட்டுக் கொண்டார். இவர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து,

நீதிவான் எதிரிக்கு 1 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா அபராதமும் 1 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்தார். அபராதப் பணத்தை எதிரி செலுத்தத் தவறினால் மேலும் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தார். (அ-52)

# பழுதடைந்த மின்கம்பத்தை அகற்றுமாறு பொதுமக்கள் வேண்டுகோள்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பிரதான வீதியில் ஆலோலை வீதிக்கு திரும்பும் வீதியின் மூலை பகுதியில் பழுதடைந்து பாவனை அற்ற நிலையில் ஓர் மின் கம்பம் காணப்படுகின்றது.

மேற்படி மின் கம்பத்தை அகற்றுமாறு அவ் வீதியில் வசிக்கின்ற பொது மக்கள் சித்தண்கேணி மின் சாரசபை அலுவலகத்திற்கு எழுத்து மூலமாக யொப்பமிட்டு வேண்டுகோள்விடுத்த போதும் இது வரை அவ் மின் கம்பம் அவ்விடத்தில் இருந்து அகற்றப்படவில்லை.

இவ் பழுதடைந்த நிலையில் உள்ள மின் கம்பம் விழும் நிலையில் காணப்படுவதால் வீதியால் செல்கின்ற பிரயாணிகள் பாதிக்கப்படலாம் எனவே உடனடியாக அவ் பழுதடைந்த மின்கம்பத்தை அகற்றி உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள் வேண்டிக்கொள்கிறனர். (அ)

# வடக்கின் மனிதாபிமான நிலை குறித்து நெதர்லாந்தும் ஐரோப்பிய ஒன்றியமும் கவலை

(கொழும்பு)

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் காரணமாக இலங்கையின் வடக்கின் மனிதாபிமான நிலை குறித்து ஐரோப்பிய ஒன்றியமும் நெதர்லாந்தும் மிகுந்த் கவலை தெரிவித்துள்ளன.

உள் நாட்டு மோதல்கள் காரணமாக இலங்கையில் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் பாரிய அளவில் மீறப்படுவதாக அவை குற்றஞ்சாட்டியுள்ளன.ஜெனீவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் 9ஆவது அமர்வில் நேற்று முன் தினம் நடைபெற்ற மனித உரிமைகளின் நிலைமைகள் தொடர்பான விவாதத்திலேயே இலங்கை தொடர்பாக மேற்படி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவ்விவாதத்தின்போது இலங்கை, சூடான், கொங்கோ ஜனநாயக குடியரசு,மக்கள் கொரிய குடியரசு, சிம்பாவே, ஈரான், ஆப்கானிஸ்தான், ஈராக், பெலாரஸ், சோமாலியா, உஸ்பெஸ்கிஸ் தான் ஆகிய நாடுகளின் மனித உரிமைகளின் நிலவரம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அங்கு ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் உரையாற்றிய ஐ.நா. வுக்கான பிரான்ஸ் தூதுவர் இலங்கையில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போர் சர்வதேச மனிதாபிமான சட்டம் பாரிய அளவில் மீறப்படுவதற்கு வழிவகுத்துள்ளது.

பலவந்தமான காணாமல் போதல்கள், சட்ட விரோத கைதுகள், நீதிக்குப்புறம்பான படுகொலைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுவருகின்றன. தீவிர மடைந்து வரும் மோதல்கள் காரணமாக இலங்கையின் வடக்கு பகுதியின் மனிதாபிமான நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளார்.

இதேவேளை அங்கு உரையாற்றிய ஐ.நா. வுக்கான நெதர்லாந்து தூதுவர் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான நிலையை மேம்படுத்துவதற்கு இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குற்றவாளிகள் சட்டத்திலிருந்து தப்பித்துச் செல்லும் நிலையை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.கடந்த சில வாரங்களாக இலங்கையின் வடக்கில் அரசாங்கபடைகளுக்கும் விடுதலைப்புலி களுக்கும் இடையில் மோதல்கள் தீவிர மடைந்துள்ளதையடுத்து பிரதேசத்தின் மனிதாபிமான நிலை கவலையளிக்கிறது. நிவாரணப் பொருட்களின் பாதுகாப்பான விநியோகத்தையும் நிவாரணப்பணியாளர்களின்பாதுகாப்பையும்உறுதிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

இதேவேளை இவ்விவாதத்தின்போது மனித உரிமை கண்காணிப்பகம் (ஹியுமன் ரைட்ஸ் வோச்) சர்வதேச மன்னிப்புச் சபை சர்வதேச நீதியாளர் அமைப்பு என்பன இலங்கை தொடர்பாக எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தினால் கல்வி ஆண்டு 2009இல் கீழ்வரும் கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கை நெறிகள்

**HNDA** -உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (முழுநேரம்/பகுதி நேரம்)

**HNDM** - உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (முழுநேரம்)

**HNDIT** - உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா (முழுநேரம்)

**HNDE** - உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (முழுநேரம்/பகுதி நேரம்)

**HNDBS** - உயர் தேசிய வணிகக் கல்வி டிப்ளோமா (முழுநேரம்)

கற்கை நெறி தொடர்பான மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் பத்திரங்களையும்78, பலாலி வீதி, திரு நெல்வேலியில் உள்ள யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும், இதற்கான முடிவுத்திகதி 2008-10-17 எனவும் நிறுவன இயக்குநர் க.கதிரமலை தெரிவித்துள்ளார்.

இவை பற்றிய விபரங்களை 2008.09.16 ஆம் திகதிய (DAILY NEWS) டெய்லி நியூஸ் பத்திரிகையிலும் பார்வையிடலாம்.(ஓ)

# விபத்து காரணமாக வருடாந்தம் இரண்டாயிரம் பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் திடீர் விபத்துக்கள் காரணமாக சுமார் 2000 பேர் ஆண்டுதோறும் உயிரிழப்பதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் திடீர் விபத்துக்கள் பிரிவு பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி இலங்கையில் மணித்தியாலம் ஒன்றுக்கு 6 திடீர் விபத்துக்கள் இடம் பெறுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

அதிக எண்ணிக்கையிலான விபத்துக்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளினால் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலக முதலுதவி தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட டாக்டர் அனில் ஜாசிங்க இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (அ-6)

# நன்மை தரும் தாவரப்பீடை நாசினிகளும் அவற்றின் தயாரிப்பு முறைகளும்

விவசாயத்தில் சிறந்த விளைச்சலைப் பெற சீரான உரப் பிரயோகமும்,பீடை நாசினிகளின் மூலம் பயிர்ப் பாதுகாப்பும் சிபாரிசு செய்யப்பட்டிருந்தன. பல தரப்பட்ட பீடை நாசினிகள் இருந்தும் எமது விவசாயிகள் இரசாயனப் பீடை நாசினிகளையே அதிகளவில் பயன்படுத்துகின்றார்கள். இவற்றினுடைய விலை விஷம் போல் ஏறியுள்ள போதிலும் அவற்றினுடைய பாவனை மட்டும் குறையவில்லை. ஆனால் தற்போது அளவுக்கதிகமான இரசாயனப் பீடை நாசினிகள் மற்றும் உரப் பிரயோகங்களால் பாரிய அபாயங்கள் ஏற்பட வழிவகுக்கப்பட்டு விட்டது.

**தொடர்ச்சியான இரசாயனப் பீடைநாசினி பாவனையால் ஏற்படும் தீய விளைவுகள்**

ஒரு குறிப்பிட்ட பீடையைக் கட்டுப்படுத்துவதற்காக புதிய பீடைநாசினியை விசிறும் போது முதலில் குறிப்பிட்ட பீடையானது கட்டுப்படுத்தப்படுகின்றது. தொடர்ந்து விசிறும் போது பீடையானது எதிர்ப்பைக் காட்டத் தொடங்குகின்றது.

அந்தப் பீடைநாசினியை மேலும் அதிகமாக விசிறும்போது பீடை மேலும் அதிகளவில் எதிர்ப்புள்ளதாக மாறு கின்றது. தொடர்ச்சியாக அடிக்கடி அப் பீடை நாசினியை விசிறுவதால் அப்பீடையை நீண்டகாலத்திற்குக் கட்டுப்படுத்த முடியாத நிலை தோன்றுகின்றது.

இவ்வாறாக எதுவித கட்டுப்பாடுகளுமற்ற தொடர்ச்சியான பொருத்தமற்ற, தவறான பீடைநாசினிப் பாவனையினால் பீடைக்கும் அதன் இயற்கை எதிரிகளுக்குமான (Natural Enemies) சமநிலை உடைக்கப்பட்டு பீடைகளின் குடித்தொகை எதிர்பாராத விதமாக அதிகரிக்கின்றது. இத் தோற்றப்பாட்டை பீடைகளின் மறுகிளர்ச்சி (Pest Resurgence) என்கின்றோம். இவ்வாறு உருவான எதிர்ப்புக் குலவகைகள் (Biotypes) பீடை நாசினிகளுக்கு எதிர்ப்பைக் காட்டத் தொடங்குகின்றது. இதனால் பல புதிய புதிய பீடை நாசினிகளின் அறிமுகம் சந்தையில் ஏற்படத் தொடங்கியுள்ளது.

அத்துடன் குறிப்பிட்ட பீடைக்கு இரசாயனப் பீடைநாசினிகளைப் பயன்படுத்துவதால் ஏனைய நன்மை செய்யும் பூச்சிகளும், பீடையில்லாத பூச்சியினங்களும் அழிக்கப்படுகின்றன. இதனால் பீடையற்ற இனங்களும் பீடையாக மாறும் அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. அத்துடன் சூழல் சமநிலை இழக்கப்படுவதுடன் பேண் தகு விவசாயத்திற்கு ஓர் தடையாகவும் அமை கின்றது. நிலத்தடி நன்னீரிலும் நச்சுத் தன்மை அதிகரிக்கின்றது.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் இரசாயனப் பீடை நாசினிகளை விசிறும் போது அவற்றில் பெருமளவு உடலினுள் சென்று செறிவடைகின்றது. அத்துடன் இரசாயனப் பீடை நாசினி விசிறப்பட்ட பயிர்களை தகுந்த கால இடைவெளி கொடுக்காது உடனடியாக அறுவடை செய்து சந்தைப் படுத்துவதால் இதனை நுகர்வோர் இப் பீடை நாசினித் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். குறிப்பாக இலங்கையிலேயே அதிகளவு புற்றுநோய் (Cancer) தாக்கத்திற்கு உள்ளான மாவட்டமாக யாழ்ப்பாணம் இருக்கின்றது.

இதற்கு முக்கியமான காரணமாக அளவுக்கதிகமான இரசாயனப் பூச்சிநாசினிகள், களைநாசினிகள் மற்றும் இரசாயனப் பசளைகளின் பாவனையே எனக் கருதப்படுகின்றது.

எனவே மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை நிவர்த்தி செய்யக் கூடியதும்,செலவு குறைந்த தாவரப் பீடை கொல்லிகளைப் பாவித்தல் இதற்கு ஓர் நல்ல தீர்வாக அமையும்.

**தாவரப் பீடை நாசினிகள்**

தாவரப் பீடைநாசினிகள் எனப்படுவது பீடைகளைக் கட்டுப்படுத்தும் தாவரப் பிரித்தெடுப்புப் பதார்த்தங்கள் ஆகும். பூச்சிப் பீடைகள், நோய்கள் என்பவற்றிலிருந்து தம்மைப்பாதுகாக்க சில தாவரங்கள் எதிர்ப்பு இரசாயனப் பொருட்களைக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக வேம்பில் அசாடிரக்ரின் (Azadirectin), நிம்பின் (Nimpin) மற்றும் செவ்வந்தியில் பைறித்தி றொடப்ட்ஸ் (Pyrethroids) போன்ற இரசாயனப் பதார்த்தங்கள் பீடைகளிற்கு எதிர்ப்பைக் காட்டக் கூடியனவாக இருக்கின்றன. இவ்வாறாக 2400 இற்கும் மேலான தாவரங்களிற்கு பூச்சிக் கட்டுப்பாட்டுத் திறன் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**சில் தாவரப் பீடைநாசினிகள் தயாரிக்கும் முறை**

இப் பீடைநாசினிகளை வீட்டிலேயே மிக எளிதான முறையில் தயாரித்துக்கொள்ளலாம்.

*1) வேப்பம் விதைக் கரைசல்*

1kg ஓடு நீக்கப்பட்ட வேப்பம் பருப்பை எடுத்து நன்றாக இடித்து ஒரு மண் பானையில் போடவேண்டும்.அதில் 2l தண்ணீரை ஊற்றிப் பானையின் வாய்ப்பகுதியை ஒரு துணியால் இறுக்கமாகக் கட்டி வைக்கவேண்டும். குறைந்தபட்சம் 3 நாட்கள் வைத்திருந்து கரைசலை வடித்து 1l உடன் 9l தண்ணீரைக் கலந்து தெளிக்கலாம். சவர்க்காரக் கரைசலுடன் சேர்த்துத் தெளிப்பது நல்லது.

இங்கு பயன்படுத்தப்படும் விதைகளின் வயது மூன்று மாதங்களிலிருந்து எட்டு மாதங்களுக்குள்ளாக இருக்கவேண்டும். ஏனெனில் மூன்று மாதங்களுக்கு முன்பும் எட்டும் மாதங்களுக்குப் பிறகும் உள்ள விதைகளில் 'அசாடிரக்ரீன்' குறைவாக இருப்பதால் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் திறன் மிகக் குறைவாக இருக்கும். விதைக் கரைசல் பால் போன்ற வெள்ளை நிறத்தில் இருக்கவேண்டும். நாட்பட்ட விதைகளிலிருந்து தயாரிக்கப்படும் கரைசல் பழுப்பு நிறமாக இருக்கும்.

*2. வேப்பிலைக் கரைசல்*

1kg வேப்பம் இலையை எடுத்து 5l நீரில் பொன்னிறம் ஆகும் வரை அவித்து பின் 12 மணி நேரம் குளிரவிட்டு வடித்தெடுத்து விசிறலாம். அல்லது 1kg இலையை எடுத்து நன்றாக இடித்து 2l தண்ணீரில் ஓர் இரவு முழுவதும் ஊறவைக்கவேண்டும். பின் கரைசலை வடித்து 1l உடன் தண்ணீரைக் கலந்து தெளிக்கலாம்.

*3. வேப்பம் பிண்ணாக்குக் கரைசல்*

1kg வேப்பம் பிண்ணாக்கை நன்றாகத் தூள் செய்து ஒரு துணியில் கட்டி 2l தண்ணீர் உள்ள பானையில் 3 நாட்களுக்கு ஊற வைக்கவேண்டும். பின்னர் இதனை தண்ணீரில் நன்றாகப் பிழிந்து சாறு எடுக்க வேண்டும்.பின்னர் தண்ணீருடன் கலந்து விசிறலாம்.

*4. வேப்பெண்ணெய்க் கரைசல்*

200ml வேப்பம் எண்ணெயுடன் சவர்க்காரக் கரைசலைக் கலந்து நன்றாகக் கலக்கிய பின்னர் தண்ணீருடன் கலந்து தெளிக்கலாம். இங்கு கரைசல் தயாரித்தவுடனேயே தெளிக்கவேண்டும். இல்லை என்றால், எண்ணெய் தண்ணீரில் மிதக்கும்.

*5. உள்ளி, இஞ்சி, பச்சை மிளகாய் கரைசல்*

20g உள்ளி, 10g பச்சைமிளகாய், இஞ்சி 10g ஆகியவற்றை தனித்தனியாக பசை போல் அரைத்து 1l தண்ணீரில் கரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் வடிகட்டி 500 ml கரைசலுடன் 100ml சவர்க்கார கரைசலையும் 9l தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும்.

**6. காட்டாமணக்கு இலைக் கரைசல்**

1kg காட்டாமணக்கு இலைகளை நன்றாக இடித்து அதனைப் பானையில் இட்டு அதனுடன் 2l தண்ணீரைச் சேர்த்து குறைந்தபட்சம் 3நாட்கள் அல்லது ஒரு வாரம் வரை வைத்திருந்து தண்ணீரை வடிகட்ட வேண்டும். பின்னர் 1/2l கரைசலுடன் 91/2 l தண்ணீரைக் கலந்து தெளிக்க வேண்டும்.

(தினமும் குச்சி கொண்டு கரைசலை நன்றாகக் கலக்கிவிடவேண்டும்.பானையில் வாய்ப்பகுதியை ஒரு துணியைக் கொண்டு மூடி வைக்கவேண்டும்.)

**7. ஐந்திலைக் கரைசல்**

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து பண்புகளுடைய தாவரங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

1.பால் வரக்கூடிய தாவரங்கள்
எருக்கு, கள்ளி, கட்டாமணக்கு
2.கசப்புத் தன்மையுடைய தாவரங்கள்
வேம்பு, தும்பை
3. கால்நடை மேயாத தாவரங்கள்
ஆடாதோடை/காட்டாமணக்கு
4. மணமுடைய தாவரங்கள்
நொச்சி, துளசி, பப்பாளி
5.பூச்சி நோய் தாக்காத தாவரங்கள்
நெய்வேலி, காட்டாமணக்கு

மேலே குறிப்பிட்ட ஐந்து வகைகளில் எளிதில் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு செடியைத் தேர்ந்தெடுத்து, அதில் 1kg எடுத்துக்கொள்ளவேண்டும். அதனை உரலில் போட்டு நன்றாக இடித்து மண்பானையில் போட்டு இலைகளின் அளவைப் போல் இரண்டு மடங்கு தண்ணீர் சேர்க்க வேண்டும்.

இதனுடன் 1l கோமியம் மற்றும் 100g பெருங்காயத்தூளைச் சேர்த்து, பானையின் வாய்ப் பகுதியை இறுக்கமாக துணி கொண்டு கட்டி வைக்கவேண்டும். தினமும் மாலைவேளையில் கரைசலைக் குச்சி கொண்டு கலக்கிவிட வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட கரைசலை ஒரு வாரம் கழித்து தண்ணீருடன் கலந்து பயன்படுத்தலாம்.

**எவ்வாறு இவை பீடைகளைக் கட்டுப்படுத்துகின்றது?**

1. முட்டை. குடம்பி, கூட்டுப்புழு எனும் பீடைப் பருவ நிலைகளை அழிக்கின்றது.

2.புழு, அணங்கு போன்றவற்றின் உருமாற்றத்தை தடை செய்கிறது.

3.பூச்சிகளிடையே இனக் கலப்பினைத் தடை செய்கின்றது.

4. பூச்சிகளை மலடாக்கும் தன்மை கொண்டது.

5. இதனுடைய சிறப்பு மணத்தினால் பூச்சிகள் பயிர்களுக்கருகே வருவதைத் தடைசெய்கின்றது.

**தாவரப் பீடைநாசினிகளின் நன்மைகள்**

இவை பாதகமான விளைவுகளை சூழலில் ஏற்படுத்துவதில்லை. நச்சுத்தன்மையற்றது. நன்மை தரும். பூச்சிகளிற்கு எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. நுகர்வோருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லை.

**செல்வி அ.பிரியதர்சினி**
**விவசாய உயிரியல் (சிறப்பு பிரிவு)**
**தகவல் தொடர்பு மையம்**
**விவசாயபீடம்.**

உடனடியாக பீடைநாசினிகளின் பாவனையை முற்று முழுதாகக் குறைக்காவிடினும் சிறிது சிறிதாகக் குறைத்து தாவரப் பீடைநாசினிகளின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சிறந்த பலனைப் பெறமுடியும். முக்கியமாகக் கூறவேண்டுமானால் தாவரப் பீடைநாசினிகளை மட்டும் பாவித்து உற்பத்தி செய்யும் பயிர்களிற்கு கூடிய கிராக்கியும் அதிகரித்த சந்தை விலையும் உண்டு. எனவே அதிக செலவு செய்து இரசாயனப் பீடை நாசினிகளைப் பாவித்து சூழலிற்கும், மக்களிற்கும் பாதிப்பை ஏற்படுத்தி குறைந்த விலையில் விற்பதை விட, குறைந்த செலவில் தவாரப் பீடைநாசினிகளைப் பாவித்து கூடிய விலையில் விற்று இலாபத்தைப் பெறுவதுடன் சூழலையும் , மக்களையும் அழிவிலிருந்து பாதுகாப்போம்.

# யாழ். இலக்கிய வட்டத்தின் கவிதை நூலுக்கான விருது

யாழ். இலக்கிய வட்ட அனுசரணையுடன் அகிலஇலங்கை ரீதியாக நடத்தப்பட்ட மூதறிஞர்கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரையின் ஞாபகார்த்த கவிதை நூலுக்கான விருது 2007பின்வரும் நூல்களுக்கு வழங்கப்படுகின்றது.

இதற்கான பரிசுத் தொகை 10ஆயிரம் ரூபாவைமூதறிஞர் கவிஞர் அரியாலையூர் வே.ஐயாத்துரையின் மகனும் யாழ்.இலக்கிய வட்ட உறுப் பினருமான ஐ.வரதராஜா வழங்கவுள்ளார்.

இப் பரிசுத் தொகை இரு நூல்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் பரிசு வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் இலங் கை இலக்கிய பேரவை செயலாளர் எஸ். சிவதாசன் அறிவித்துள்ளார்.

**பரிசுபெறும் நூல்கள்**

1. ''இரண்டு கார்த்திகைப்பூக்கள்'' - எஸ். புஸ்பானந்தன்
2. ''தனித்தலையும் பறவையும்...'' - றகுமான் ஏ.ஜமில்

(ஓ)

## சீரடி பாபாவின் சத்சரிதம் வாசிப்பும், பிறந்த தின விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் 22 ஆம்திகதி திங்கள் முதல் 28ஆம்திகதி ஞாயிறு வரை தினசரி காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் வரை சீரடி பாபாவின் சத்சரிதம் வாசிக்கப்படும்.

28.9.08 ஞாயிறு சீரடி பாபாவின் பிறந்த தினமன்று வேதபாராயணம், காயத்திரி மந்திர ஜெபம், தியானம், பஜனை ஆகியவற்றுடன் நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறும். (ஓ)

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் வருடாந்த மஹோற்சவம்

## இம்மாதம் 29 ஆம் திகதி திங்கள் ஆரம்பம்

(பருத்தித்துறை)

சரித்திரப் பிரசித்திபெற்ற புலோலி அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 நாட்கள் உற்சவம் நடைபெறும்.

உற்சவ நாட்களில் முதல் ஆறு நாட்களிலும் சுவாமி உள்வீதி உலாவுடன், திருவிழா நிறைவுபெறும்.

ஒக்ரோபர் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 7ஆம் திருவிழாவுடன் வெளிவீதி உலா ஆரம்பமாகும்.

6 ஆம்திகதி திங்கள் குருக்கட்டுப் பிள்ளையார் தரிசனமும் , 7ஆம் திகதி வெண்ணெய்த் திருவிழாவும் , 8 ஆம் திகதி துகில் திருவிழாவும் , 9ஆம்திகதி பாம்புத் திருவிழாவும் , 10 ஆம்திகதி கம்சன் போர்த் திருவிழாவும், 11 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் , 12 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் ,13 ஆம்திகதி தேர்த்திருவிழாவும் , 14 ஆம் திகதி கடல் தீர்த்தமும் , 15 ஆம் திகதி கேணித் தீர்த்தமும் கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.தினமும் காலை திருவிழா முற்பகல் 9மணிக்கும் ,மாலை திருவிழா பிற்பகல் 3மணிக்கும் ஆரம்பமாகும்.

மஹோற்சவ காலங்களில் ஆலயத்தில் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

இவ்வுற்சவ காலத்தை முன்னிட்டு விசேட பஸ்சேவைகள் இடம்பெறவுள்ளன.(ஓ-52 ,35)

# இலங்கையில் காணப்படுவது வெறுமனே ஒரு இன முரண்பாடல்ல தேசிய வாதமே இனங்களுக்கிடையில் பிரச்சினைக்கு காரணம்

## முன்னாள் ஜனாதிபதியின் ஆலோசகர் வாதம்

(கொழும்பு)

இலங்கையில் காணப்படும் முரண்பாட்டை வெறுமனே ஒருஇன முரண்பாடு என்று மட்டும் கொள்ள முடியாது என்று அம்ஸ்ரடாங் பல்கலைக்கழக வருகை தரு பேராசிரியரும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியின் ஆலோசகருமான ராம் மாணிக்கலிங்கம் குறிப்பிடுகிறார். இந்தியாவின் ஃபுரொன்ட்லைன் சஞ்சிகையில் வெளியான Lessons of a Conflict தனது பத்தியிலேயே அவர் தனது இந்த வாதத்தை முன்வைத்துள்ளார்.

சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் ஏனைய இனங்களுக்கிடையிலான இனப் பிரச்சினை, விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப் படைகளுக்கும் இடையிலான ஆயுத மோதல் மற்றும் அரசியல் பிரச்சினை என ஒரு முப்பரிமாணமுள்ள பிரச்சினை இலங்கையில் தொடர்வதாக அவர் வாதிடுகிறார்

### தேசிய வாதம்

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இனப்பிரச்சினையானது தீர்ப்பதற்கு மிகவும் கடினமானதாக அமைந்துள்ளது என தனது பத்தியில் குறிப்பிடும் பேராசிரியர் மாணிக்கலிங்கம் தேசியவாதமே இந்த இரண்டு இனங்களுக்கும் இடையிலான இனப் பிரச்சினைக்குக் காரணமாக அமைந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டுகிறார். இனங்களின் குழுக்களுக்கிடையில் காணப்படும் வேற்றுமைகள் வளங்கள் தொடர்பான பேராசை போன்றனவும் இனப் பிரச்சினைக்குக் காரணமாக அமைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான முரண்பாடு இன அடையாளம் மற்றும் வளப்பகிர்வு தொடர்பானது என்ற விளக்கம் தொடர்ந்து நிலவினாலும் இந்த விளக்கம் தனதுநம்பகத்தன்மையை இப்போது வெகுவாக இழந்து வருகிறது. பெரும்பாலான சிங்களவர்களும் தமிழர்களும் போர் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்றே இன்று விரும்புகின்றனர். சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மத்திய அரசாங்கத்திடமிருந்து தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதன் மூலமே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியுமென்பதை விரும்பியோ விரும்பாமலோ பெரும்பாலான சிங்களவர்களும் தமிழர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என அவர் குறிப்பிடுகிறார்.

என்னதான் வித்தியாசமான தீர்வுகள் முன்மொழியப்பட்டபோதும் பெயரளவில் இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு வடிவிலான சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென்பதே தீர்வை விரும்பும் பெரும்பான்மையானவர்களின் நிலைப்பாடாக உள்ளது. என ராம் மாணிக்கம் குறிப்பிடுகிறார். இலங்கையில் இருப்பது ஒரு இனப்பிரச்சினை இல்லையெனவும் அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்படவேண்டும் எனவும் கூறும் சிங்களத் தீவிரப் போக்காளர்களையும் ஒரே முரண்பாடு இன முரண்பாடுதான் எனவும் இதற்கு தனிநாடே தீர்வாக அமையும் எனவும் கூறும் தமிழ் தீவிரப்போக்காளர்களையும் தவிர பெரும் பாலான இலங்கையர்கள் அதிகாரப்பகிர்வின் அடிப்படையிலான தீர்வை ஏற்றுக்கொள்கின்றனர். என பேராசிரியர் மாணிக்கலிங்கம் குறிப்பிடுகிறார்.

அவ்வாறெனின் ஏன் இதுவரை எந்தவொரு தீர்வும் எட்டப்படவில்லை? எனக் கேள்வியெழுப்பியிருக்கும் அவர் இங்கேதான் நியாயமான வேறுபாடுகள் வருகின்றன என்று குறிப்பிடுகிறார்.

### ஒற்றுமையில் வேற்றுமை

அதிகாரப்பகிர்வை கடுமையாக விமர்சிக்கும் பெரும்பாலான சிங்களவர்கள் தமிழர்கள் கேட்பதைவிடக்கூடுதலான அதிகாரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுவிடுமோ என்ற கவலைகொள்வதைவிட அதிகாரப்பகிர்வின் மூலம் விடுதலைப்புலிகள் அதிகாரங்களைப் பெற்று தனி நாட்டைப் பெற்றுவிடுவார்கள் என்றே அதிகம் கவலை கொள்கின்றனர். அதேபோல சிங்களவர்களுடன் இணைந்து வாழ்வது பற்றிக் கவலையடைவதை விடவும் விடுதலைப்புலிகள் என்ற ஆயுத சக்தி பின்னணியில் இல்லாவிட்டால் இலங்கை அரசாங்கங்கள் உறுதிமொழி வழங்கியவற்றை நடைமுறைப்படுத்தாமல் ஏமாற்றிவிடும் என்ற கவலையே பெரும்பாலான தமிழர்களிடம் உள்ளது என ராம் மாணிக்கலிங்கம் வாதிடுகிறார். இவ்வாறான வேறுபட்ட கருத்துக்களே தீர்வு குறித்த நியாயமான இணக்கப்பாடுகளையும் கடந்து போருக்கு ஆதரவான போக்கு வளர்வதற்குக் காரணமாகிறது என்கிறார் அவர்.

தீர்வொன்றை நோக்கி இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கு வன்முறைகள் அவசியமானது எனப் பெரும்பாலான தமிழர்கள் உட்பட ஏனைய இனத்தவர்கள் சிலரும் நம்புகின்றனர். இவர்களில் சிலர் விடுதலைப்புலிகள் உண்மையான விடுதலைப் போராட்டக் குழு இல்லையெனக் கருதினாலும் வன்முறைகளுடன் கூடிய போராட்டம் அல்லது அது குறித்த மிரட்டல் மட்டுமே அதிகாரப்பகிர்வு மூலமான அரசியல் தீர்வொன்றைச் சாத்தியமாக்கும் என்று நம்புவதாக மாணிக்கலிங்கம் குறிப்பிடுகிறார்.

இதேநேரம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ வன்முறைகளுக்கு ஆதரவு வழங்கும் சிங்களவர்களும் ஏனைய இனத்தவர்கள் சிலரும் விடுதலைப்புலிகள் தமது அதிகாரப் பலத்தைப் பற்றியே அக்கறை செலுத்துவதாகவும் தமிழ் மக்களின் நலன் குறித்து அவர்களுக்கு அக்கறை கிடையாது என்றும் நம்புகின்றனர்.

விடுதலைப்புலிகள் இருக் கும் வரையில் ஒரு அமைதித் தீர்வு சாத்தியம் இல்லை என்று இவர்கள் நம்பினாலும் அனைத்துச் சமூகத்தவரையும் சமமாக கருதும் ஒரு தீர்வுக்கு அவர்கள் எதிரானவர்கள் அல்ல. எனவே இவர்களை எளிதாக இனவாதிகள் என்று குறிப்பிட்டுவிட முடியாது என வாதிடுகிறார். பேராசிரியர் மாணிக்கலிங்கம்.

விடுதலைப் புலிகள் மீது அல்லது அரசாங்கத்தின் மீது இராணுவ அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் என்ற இந்த இரண்டு வகை நிலைப்பாடுகளும் கடுமையான ஒரு போரின் பின்னணியில் அரசியல் ரீதியான பிளவுண்டுள்ள இரண்டு தரப்புக்களுக் கிடையிலான நிலைப்பாடுபோன்றே தென்படும் எனக் குறிப்பிடும் அவர் எனினும் இரண்டு தரப்புமே ஒருவருக்கொருவர்மிகவும் நெருக்கமான கருத்துக்களையே கொண்டிருப்பதாகவும் ஒரே அரசியல் தீர்வையே அவர்கள் வலியுறுத்துவதாகவும் வாதிடுகிறார்.

இன முரண்பாடுகளின்போது துரதிஷ்டவசமாக நியாயமான வேறுபாடுகள் பெரும்பாலும் கண்டுகொள்ளப் படுவதில்லை என்பதால் ஒரு தீர்வைக் காணும் முயற்சியில் அவை ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களை குறைக்கும் வழி வகைகள் குறித்து ஆராயப் படுவதில்லை. இது தீர்வுக்கான சாத்தியம் குறித்த பாதகமான பார்வையையே ஏற்படுத்தும் ஆனால் நியாயமான வேறுபாடுகளை இனங்காண்பதால் நிலையான ஒரு தீர்வு குறித்த சாதகமான நிலைப்பாடு ஏற்படும் என்று வாதிடுகிறார்.பேராசிரியர் மாணிக்கலிங்கம்.

எனினும் ஒரு இன முரண்பாட்டில் காணப்படும் இந்த நியாயமான வேறுபாடுகளை இனங்காண்பதில் அதனோடு இணைந்ததாகக் காணப்படும் ஏனைய சில முரண்பாடுகள் சிக்கலை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிடுகிறார். (அ-5)

## கப்பல் மூலம் உரம்; அரசு நடிவடிக்கை

(கொழும்பு)

குடாநாட்டில் விவசாய நடவடிக்கை களுக்குத் தேவையான 2800மெற்றிக் தொன் உர வகைகளை நாளை கடல் மார்க்கமாக யாழ்ப் பாணத்துக்குஅனுப்பி வைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத் துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் தரித்துள்ளயால கப்பலில் இந்த உர வகைகள் ஏற்றப் படுவதாகவும் நாளை இக் கப்பல்வடக்கு நோக்கிப் புறப்படும் எனவும் அத்தயாவசிய சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது.

(அ-6)

## “லாவ்” எரிவாயுவின் விலை நவம்பர் மாதத்தில் குறைக்கப்படும்

(கொழும்பு)

“லாவ்”சமையல் எரிவாயுவின் விலையை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் குறைக்கக் கூடியதாக இருக்கம் என லாவ் எரி வாயு நிறுவனம் அறிவித்துள்ளது.உயர் நீதிமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்டவிலை சூத்திரத்திற்கு அமையஇரண்டு மாதங்களுக்கு ஒரு முறை எரிவாயுவின் விலையில் மாற்றங்களை செய்வது குறித்து ஆராயப்படும் என்றும் அந்த நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டபிள்யூ சி.ஏச் வேகப் பிட்டிய தெரிவித்தார்.

இதன் படி கடந்த சில மாதங்களாக உலக சந்தையில் எரி வாயுவின் விலை குறைந்திருப்பதால் உள் நாட்டிலும் எரிவாயுவின் விலையைக்குறைக்க எதிர் பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கு தமிழில் சுற்று நிருபங்கள் அனுப்பவும்

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிக ளுக்கு தமிழில் அரச சுற்று நிருபங்களை அனுப்பு மாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். தமிழ் பேசும்



மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கு அரசாங்கத் தினால் , திணைக்களங் கள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு அனுப் பப்படும் சுற்றுநிருபங்கள் தமிழில் அனுப்பப்படுவதில்லை. என்ற குறை நீண்ட கால மாக நிலவி வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக அண்மையில் வட பகுதியில் இருந்து கொழும்புக்கு தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கு வந்த மாணவர்கள் மற்றும் பொறுப்பாசிரியர்களினால் ஜனாதி பதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டி ருந்தது. சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச் சரும் வடமாகாண விசேட செயலணியின் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவாணந் தாவின் ஏற்பாட்டில் கடந்த வாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் சந்திப்பொன்றை நடத் தியிருந்தனர்.

இந்தசந்திப்பிலேயே அரசாங்கத்தினால் அனுப்பப்படும் சுற்று நிருபங்கள் தமிழில் அனுப்பப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. என தெரிவிக்கப்பட்டது.

இதனை கருத்தில் கொண்ட ஜனாதிபதி நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தின் போது இவ்விடயம் குறித்தும் சகல அமைச்சர்களுக்கும் அறிவித்திருந்தார்.

இதன் பிரகாரம் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்ற சுற்று நிருபங்கள் அனைத்தும் தமிழ் மொழி மூலம் அனுப்புவதற்கும் அரச சுற்று நிருபங்களை மும்மொழியிலும் அச்சிட்டு வழங்குவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணிப்புரை விடுத்திருந்தார்.

தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கு சிங்கள மொழியில் சுற்று நிருபங்கள் அனுப்பப் படுவதனால் அவற்றைப்படித்து புரிந்து கொள்வதற்கு ஒவ்வொரு அரசாங்க ஊழியர்களும் திணைக்களங்களும் மிகவும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கண்டி புலனாய்வுப் பொலிஸாரால் மன்னாரில் இரு இளைஞர்கள் கைது

### அமைச்சர் டக்ளஸை கொலை செய்ய திட்டம் தீட்டியதாக சந்தேகம்

(செங்கடகல)

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரொருவர் வழங்கிய தகவலின் பிரகாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கொலை செய்ய திட்டமிட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் இருவரை 'கண்டி விசேட குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னாரில் வைத்து கைது செய்யப்பட்டு கண்டிக்கு அழைத்து வரப்பட்டதாக கண்டி பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

அண்மையில் கொத்மலை பிரதேசத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞரொருவரை கைது செய்த கண்டி குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் அவரிடம் தொடர்ந்து மேற்கொண்ட விசாரணையின் போதே மேற்படி இரு சந்தேக நபர்கள் குறித்து தகவல் கிடைக்கப்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொத்மலைப்பகுதியில் கைது செய்யப்பட்ட இளைஞர் பொலிஸாரைக் கண்டதும் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாக கண்டி பொலிஸ் தலைமையகம் தெரிவிக்கிறது.

மன்னாரில் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தாவை படுகொலை செய்யத் திட்டமிட்டிருந்ததாகவும் அதனைத்தொடர்ந்து மேலும் சில முக்கிய புள்ளிகளைக் கொலை செய்யத்திட்ட மிட்டிருந்ததாகவும் இதன் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கும் பொலிஸார் இவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தனர். (அ-6)

> நியாயத்தை கடைப்பிடிப்பவன் –பொறாமையின் மத்தியிலும் மேலாக விளங்குவான்.
> –போலந்து

வலம்புரி

# புங்குடுதீவுச் சர்வோதயம் ஏழைகளுக்குச் செய்த பாவத்தை நீக்கவேண்டும்

புங்குடுதீவுச் சர்வோதயம், வட இலங்கை சர்வோதயம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது.

இந்த அமைப்பின் ஆரம்ப அறங்காவலராக இருந்தவர் காலஞ்சென்ற திருநாவுக்கரசு. அவரின் காலத்தில் சர்வோதயத்தில் பிறப்பு நிதியம், திருமண நிதியம், மரண நிதியம் என பலவகை நிதியங்களை ஆரம்பித்து அதில் அங்கத்தவர்களை இணைத்துக் கொண்டார்.

அந்த நிதியத்தோடு பிடியரிசித் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏழைக்குடும்பங்கள் இந்த நிதியத்தில் இணைந்து கொண்டார்கள்.

யுத்தம், இடம்பெயர்வு என்ற பல்வகைச் சிரமங்களின் மத்தியிலும் அங்கத்தவர்கள் தமது அங்கத்துவ பணத்தை செலுத்தி வந்தார்கள்.

இருந்தும் அவர்களுக்கு நிதிக் கொடுப்பனவுகள் எதனையும் வழங்காது புங்குடுதீவுச் சர்வோதயம் துரோகம் இழைத்தது.

அப்போது அறங்காவலராக இருந்த திருநாவுக்கரசு பல்வேறு சூழ்ச்சிகள் செய்து நிதி செலுத்திய அங்கத்தவர்கள் தமது அங்கத்துவத்தை இழந்தவர்களாகக் காட்டி நிதி மீளளிப்பிலிருந்து தப்பித்துக் கொண்டார்.

சிலருக்கு செலுத்திய நிதியின் மொத்தத் தொகையில் பத்தில் ஒரு மடங்கைச் செலுத்த முன்வந்தார். உதாரணமாக ஐயாயிரம் ரூபாய் வரை அங்கத்துவ பணம் செலுத்தியவர்களுக்கு அறுநூறு ரூபாயைக் கொடுக்க முன்வந்தார். எப்படியிருக்கிறது நிலைமை?

ஏழைகளுக்கு புங்குடுதீவுச் சர்வோதயம் செய்த பாவத்திற்கு தற்போது அந்த அமைப்பில் இருக்கும் பிரகிருதிகளும் துணையாக இருந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இங்கு குறிப்பிடுகின்ற சம்பவம் யாரையேனும் பாதிக்குமாயின் அவர்கள் உண்மையைக் கண்டறிந்து அதற்குப் பரிகாரம் காண முற்படுவதே மக்களுக்குச் செய்யும் பெருந் தொண்டாகும்.

நம் யாழ்ப்பாணத்தின் மிகப் பெரியதோர் துரதிர்ஷ்டம் பெரியவர்கள், அறிஞர்கள் எவரையும் வாழ்த்த –வாயாரப் புகழ்ந்து போற்ற முன்வருவதாகும்.

'பொய்மையாளரை பாடாதே புலவீர்காள்' என்ற சுந்தரனின் அறிவுரையை ஒரு கணமேனும் சிந்திப்பது நல்லது.

ஒரு அமைப்பு மக்களுக்கு ஆற்றிய தொண்டு பற்றி ஆய்வு செய்த பின்னரே அந்த அமைப்புப் பற்றி புகழும் போற்றுதலும் அமையவேண்டும்.

இதைவிடுத்து எல்லாவற்றையும் புகழ்பாடுவது உகந்ததல்ல. எனவே இங்கு குறிப்பிடப்படும் விடயத்தில் எவர் கேட்டாலும் சான்றாதாரங்களுடன் புங்குடுதீவுச் சர்வோதயம் ஏழைகளுக்குச் செய்த பாவத்தை –துரோகத்தை –மோசடியை நிரூபிக்க தயாராக இருக்கின்றோம்.

# எம்மில் ஒரு பகுதியை தியாகம் செய்யும் இரத்ததானம் உன்னதமான தியாகம்மாகும்

**யாழ்ப்பாணம் சத்ய சாயி சேவா நிலையத்தில் நாளை நடைபெறும் இரத்ததானத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

மனிதன் தன்னுள் உள்ள தெய்வீகத்தை பிரேமை மூலம் வெளிப்படுத்த முடியும் என்ற பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா கூறுகிறார். பிரேமை என்பது சுயநலமற்ற எதையும் எதிர்பாராத ஆத்மீக அன்பு ஆகும்.



இந்தப் பிரேமை எம்முள் வளர நாம் தியாகம் என்ற குணத்தை எம்முன் வளர்த்துக் கொள்ள வேண்டும். தியாகம் இல்லாமல் பிரேமையை வெளிப்படுத்த முடியாது. என்று சுவாமி கூறுகிறார். எமது செல்வத்தை, நேரத்தை, ஆசையை அல்லது எம்மையே தியாகம் செய்வதன் மூலமே பிரேமையை எம்முன் வளர்க்க முடியும். அது மட்டுமல்ல தியாகத்தின் மூலமாகவே மனிதன் ஆனந்தத்தை பெறமுடியும் என்றும் சுவாமி கூறுகிறார். செல்வத்தாலோ, கல்வியாலோ வேறு எதனாலுமே பெற முடியாத ஆனந்தத்தை தியாகம் எமக்கு தருகிறது என்று சுவாமி கூறுகிறார். சிபிச்சக்கரவர்த்தி, பலிச்சக்கரவர்த்தி என்போர் தம்மையே தியாகம் செய்து உன்னத நிலையடைந்தார்கள்.

எமது செல்வத்தின் ஒரு பகுதியையோ நேரத்தில் ஒரு பகுதியையோ தியாகம் செய்வதை விட எம்மில் ஒரு பகுதியை மற்றவர்களுக்காக தியாகம் செய்வது மிகவும் உன்னதமான தியாகமாகும். இரத்ததானம் மூலம் நாம் எம்மில் ஒரு பகுதியை மற்றவர்களுக்காக தியாகம் செய்கிறோம். இந்த தியாகம் என்ற குணத்தை நாம் வளர்த்து உன்னத நிலையடைய வேண்டும் என்பதற்காகவே சுவாமி வருடத்தில் ஒரு நாளை உலகளாவிய இரத்ததான தினமாகப் பிரகடனப்படுத்தி அந்நாளில் எம்மை இரத்த தானத்தில் ஈடுபடும்படி வலியுறுத்துகிறார். இரத்த தானம் செய்யும் போது நாம் இன்னொருவருக்காக அதுவும் எமது உற்றார், உறவினரல்லாத முகமே தெரியாத ஒருவருக்காக எம்மில் ஒருபகுதியை தியாகம் செய்ய சந்தர்ப்பம் கிடைக்கிறது. இது எப்படி சாத்தியமாகிறது.

இந்த உலகின் எல்லா உயிர்களிலும் ஆத்மாவாக இறைவனே இருக்கிறார் என்பதையும் அந்த இறைவனில் உள்ள

**Dr.சி.சிவராணி**
"மருத்துவ பிரிவு" வட பிராந்திய சத்யசாயி சேவா நிறுவனம்

அன்பே எம்மை இதை செய்ய தூண்டுகிறது. இதுவே பிரபஞ்சபிரேமையாகும். இந்தப் பிரபஞ்சபிரேமை மூலமே நாம் தெய்வீகத்தை உணரமுடியும் இதனாலேயே எல்லா சேவைகளிலும் இரத்ததானம் மிக உன்னதமான சேவையாகக் கருதப்புடுகிறது.

சுவாமி இரத்தம் என்பது ஒரு திரவ நிலையிலுள்ள அன்பு என்று கூறுகிறார். அதாவது இரத்ததானம் மூலம் நாம் எம்முள் உள்ள அன்பையே திரவமாக மற்றவருக்கு கொடுக்கிறோம். எமக்குள் எந்த அளவு அன்பு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு இரத்த தானத்தில் அதிகளவில் ஈடுபடுவோம். ஒருவருக்கு இரத்த இழப்பு ஏற்படும்போது அது இரத்தத்தினாலேயே மட்டுமே ஈடு செய்ய முடியும். அந்த இரத்தம் கிடைக்காவிடின் உயிரிழப்பு கூட ஏற்படலாம் எனவே இரத்த தானத்தின் மூலம் இந்த உயிரிழப்புகளை தவிர்த்து உயிர் காக்கும் உன்னதப்பணியில் ஈடுபடுகிறோம். எனவே சுவாமியின் உலகளாவிய இரத்த தான தினத்தை முன்னிட்டு நாளை யாழ்ப்பாணம் சத்யசாயி சேவா நிலையத்தில் நடைபெறும் இரத்த தானத்தில் பங்குபற்றி பிரபஞ்சப் பிரேமையை வெளிப்படுத்துவோமாக.

# உயர்தரத்தில் சித்திபடையும் சகலருக்கும் பல்கலைக்கழக அனுமதி வழங்க வேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழக கல்விக்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் றொபர்ட் பிளெக் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அரசாங்கப் பல்கலைக்கழகங்களில் ஒரு குறிப்பிட்டளவு மாணவர்களே இணைத்துக் கொள்ளப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் துறையினருக்கு பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு அனுமதியளிப்பதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு பயனடையக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

சிறந்த நிறுவனங்களுக்கான அமெரிக்க விருது வழங்கும் பட்டியலில் இலங்கையின் வெட்சுசா நிறுவனமும் இடம்பெற்றுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் இலங்கை மாணவர்களின் முழுமையான திறமைகளை வெளிக்கொணர வேண்டுமாயின் அதிக பல் கலைக்கழகங்கள் நிறுவப்பட வேண்டியது இன்றியமையாததென அமெரிக்கத் தூதுவர் றொபாட் பிளெக் தெரிவித்துள்ளார்.

(அ-6)

# சயரோகத்திற்காக சிகிச்சை பெறாதவருக்கு நீதி மன்றம் தண்டனை விதிப்பு

(கொழும்பு)

சயரோக (Tuberculosis) நோய்க்கான சிகிச்சையை தவிர்த்து வந்த ஒருவரை 14 நாள் விளக்க மறியலில் வைக்குமாறு நாவலப் பிட்டிய நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாவலப்பிட்டிய –இம்புல்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த இவர்கடந்த ஒரு வருடமாக சயரோக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார். கண்டி பொது வைத்தியசாலையில் முதலில் தமது நோய்க்கான சிகிச்சையைப் பெற்று வந்த இவர் பின்னர் அதனை தவிர்த்து வந்ததாக குற்றஞ்சுமத்தி கண்டி போதனா வைத்தியசாலையின் சயரோக தடுப்பு பிரிவு நாவலப்பிட்டி மாவட்ட சுகாதார பரிசோதகருக்கு தகவல் வழங்கியது. இதனடிப்படையில் இவருக்கெதிராக நாவலப்பிட்டி நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்யப்பட்டது. இதன் போது குறித்த நோயாளியை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான் லலித் ஏக்கநாயக்க விளக்க மறியல் காலத்தில் சிறைச்சாலை உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் சயரோகத்திற்கான உரிய சிகிச்சையை வழங்குமாறும் உத்தரவிட்டார். இதே வேளை சயரோக நோயாளி ஒருவருக்கு அவரின் நோயை முழுமையாகக் குணப்படுத்துவதற்காக அரசாங்கம் 45 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபா வரையில் செலவிடுகிறது.

இந்த நிலையில் இதற்கான சிகிச்சையை தவிர்த்து வருவது சயரோகத்தை ஒழிக்கும் சுகாதார அமைச்சின் திட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் பாதிப்பை ஏற்படுத்தும் என நாவலப்பிட்டி பொதுசுகாதார பரிசோதகர் செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

(அ-5)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## ஆளுமை வளர்ச்சியின் விதிமுறைகள்



தன் மணத்தை அடக்க முடிந்தவனால் மற்ற எல்லா மனங்களையும் கட்டாயமாக அடக்க முடியும். இதனாலேயே தூய்மையும் ஒழுக்கமும் எப்போதும் மதத்தின் நோக்கமாக வைக்கப்பட்டுள்ளன. தூய்மையும் ஒழுக்கமும் வாய்ந்தவன் தன்னை அடக்கி ஆள்கிறான் எல்லாமனங்களும் ஒரே தன்மையுடையவை, ஒரே பெரிய மனத்தின் பகுதிகள், களிமண் கட்டி ஒன்றை அறிந்தவன், பிரபஞ்சத்திலுள்ள களிமண் அனைத்தையும் அறிந்தவன் ஆகிறான். தன்மனத்தை அறிந்து அடக்குபவன் ஒவ்வொரு மனத்தையும் பற்றிய இரகசியத்தை அறிகிறான், ஒவ்வொரு மனதையும் அடக்கவல்லவன் ஆகிறான். நுண்ணிய பகுதிகளை அடக்கி விட்டால் பௌதீக உலகின் தீமையின் பெரும் பகுதியை நாம் ஒழித்து விட முடியும் நுண்ணிய இயக்கங் களை நாம் அடக்குவோமானால் பல கவலைகளை நீக்கி விட நம்மால் முடியும் இந்த நுண்ணிய ஆற்றல் களை அடக்க முடிந்தால்பல தோல்விகளைத் தவிர்த்து விடலாம்.

மாநகர சபை, யாழ்ப்பா



## மேலும் 215 தொண்டர்...

மாகாணத்தில் 386 தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது. வடக்கு மாகாணத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்வியமைச்சின் ஊடாக அமைச்சரவைக்கு முன்வைத்தார். இவ் அமைச்சரவைப் பத்திரத்துக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை வடக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாத சம்பள நிலுவையை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வடமாகாண கல்விச் செயலாளர் 50 இலட்சம் ரூபா காசோலையை வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாத காலமாக குறித்த ஆசிரியர்கள் ஊழிய வேதனமின்றி கடமை புரிந்தமையை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான முயற்சிகளை ரிசாட் பதியுதீன் மேற்கொண்டிருந்தார். (ச-5)

## தேசிய மட்ட...

இரு தினங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளமையால் இப்போட்டிகளில் பங்கேற்ற இன்று கப்பல் மூலம் செல்லவிருந்த மாணவர்கள் நாளை மறுதினமே பயணங்களை மேற்கொள்ளவுள்ளனர். (ச-5)

## அரசாங்கத்துக்கு...

அரிசியின் கட்டுப்பாட்டு விலையை அரசு 70 ரூபாயாக நிர்ணயித்துள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாண மக்களுக்கு அனுப்பி வைப்பதற்காக தனியார் வர்த்தகர்களிடம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் வழங்கற் கட்டளைகளைக் கோரிய போதும் அவர்கள் அதற்கு பின்னடிப்பதாக அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் வர்த்தகர்கள் ஒரு கிலோ அரிசியை 85 ரூபாய் வீதம் கொழும்பு வர்த்தகர்களிடம் கொள்வனவு செய்வதனாலேயே அரசுக்கு அரிசியை வழங்க கொழும்பு தனியார் வர்த்தகர்கள் பின்னடிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பாக நேற்று அத்தியாவசிய சேவைகள் குறித்து யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் அரச அதிபர் க.கணேஷ் இத்தகவலை வெளியிட்டார். இந்நிலையில் கோதுமை மட்டுமே அரச அதிபரினால் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுவதாகவும் அரிசி, சீனி போன்ற பொருட்கள் தனியாரால் மட்டும் எடுத்து வரப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை தற்போதுள்ள 90 நிமிட இரவு நேர மின்வெட்டை அடுத்த வாரம் முதல் 60 நிமிடங்களாகக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் இலங்கை மின்சார சபைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்ட அத்தியாவசிய சேவைகள் மாநாடு நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் நடைபெற்றது. இம் மாநாட்டில் சகல அரச திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தின்போதே இலங்கை மின்சார சபையின் யாழ்.பிராந்திய உதவிப் பொது முகாமையாளருக்கு அரச அதிபர் மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார். இதற்கு பழுதடைந்த மின் பிறப்பாக்கிகளின் திருத்தவேலைகள் நடைபெறுவதாகவும் அவ்வேலைகள் முடிபடைந்ததும் அடுத்த வாரம் 60 நிமிடங்களாக இரவு நேர மின்வெட்டு குறைக்கப்படுமென இலங்கை மின்சார சபையின் யாழ்.பிராந்திய உதவிப் பொது முகாமையாளரால் பதிலளிக்கப்பட்டது.

அத்துடன் சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் மின் நிலையத்தின் 40 வீத வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வன்னித் தலைமை...

போது நடத்தினார்.

வன்னி கூட்டுப்படைத் தலையகத்தின் மீது கரும்புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு பின்னர் விசேட படைப்பிரிவுடன் இராணுவத் தளபதி மேற்கொள்ளும் இரண்டாவது கலந்துரையாடல் இதுவாகும்.

கரும்புலிகளின் தாக்குதலுக்குள்ளான படைத் தலைமையகத்தின் கட்டடங்கள், தாக்குதல் இடம்பெற்ற பிரதேசங்கள் மற்றும் புலிகளின் தாக்குதலை முறியடித்த விசேட படையணியின் முகாம் என்பவற்றையும் இராணுவத் தளபதி பார்வையிட்டுள்ளார்.

அத்துடன், ஏ-9 வீதியினூடாக மனித நேய உதவிகளை அனுப்புவதற்கான பயண ஏற்பாடுகள், விடுவிக்கப்படாத பகுதியில் உள்ள பொதுமக்களுடைய நிலைமைகள் என்பன குறித்து இராணுவத் தளபதி, யாழ். கட்டளைத் தளபதி உட்பட பிரதேச தளபதி ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார் என்றும் அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டது. (ச-5)

## ஜனாதிபதியின் வருகை...

அமெரிக்காவில் உள்ள இனப்படு கொலைக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு தமிழர்கள் நியூயோர்க் நகரில் மாபெரும் கண்டனப் பேரணிக்கு அனுமதி பெற்று ஒழுங்கு செய்துள்ளனர்.

எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணி வரைக்கும் நியூயோர்க் மாநகரில் முதலாம் அவென் யூவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்பாக கூடி நமது எதிர்ப்பைப் பறைசாற்றுவோம்.

வன்னிப் பெருநிலப்பரப்பிலிருந்து அனைத்துலக தொண்டு நிறுவனங்களை வெளியேற்றியதைக் கண்டித்தும்,

வன்னியில் அல்லலுறும் மக்களுக்கு உதவி செய்யுமாறு ஐக்கிய நாடுகள் சபையை வேண்டியும்

இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்றுள்ளது. (ச)

## மீசாலை...

2008ஆம் ஆண்டுக்கான 5ஆம் ஆண்டு புலமைபரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 15,000 பேர் புலமை பரிசில் பெற தகுதி பெற்றுள்ளனர் எனவும் இவர்கள் புதிய பாடசாலைகளிற்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுக்கிடைத்த பெறுபேறு களின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலையில் 119 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர். இவர்கள் பரீட்சைக்கு தோற்றியோரில் 60 வீதம் என பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை பாடசாலைகளுக்கான பெறுபேறுகள் இன்று அனுப்பிவைக்கப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார். (ச-3,5)

## யாழ்ப்பாணத்...

மாவட்டத்திற்கு 110 வெட்டுப் புள்ளிகள். பெறுபேறுகள் எதிர்வரும் 2ஆம் திகதி இணையத்தளத்தில் சேர்க்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார். (ச)

## ஜனாதிபதி...

மாகவுள்ளது.

சவால்கள் மற்றும் எதிர்காலம் என்ற தொனிப்பொருளில் 22ஆம் திகதி விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

மேலும் பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விசேட உரையாற்ற உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## மரண அறிவித்தல்

### சதாசிவம் இந்திராதேவி

கரணவாய் கிழக்கு, கரவெட்டியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் இந்திராதேவி நேற்று (19.09.2008) அன்று காலமாகிவிட்டார். இவரது இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று கரவெட்டி சோனப்பு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கரணவாய் கிழக்கு,**
**கரவெட்டி.**

(C-1576)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## அனைவரினதும் ஒத்து...

எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலையில் தரம் 2 வரை கல்வி கற்றேன். பின்னர் மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் தரம் 3இல் கல்வி கற்றேன்.

தொடர்ந்து 4ஆம் தரம் முதல் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வருகிறேன். எனது பெற்றோர்கள் ஆசிரியர்களாக இருந்தாலும் பலமுறை ஏற்பட்ட இடம்பெயர்வுகளால் ஏற்பட்ட இழப்புக்களால் சொந்த வீடு இன்றி கஷ்டப்படுகின்றோம்.

எனது கல்விக் காலம் ஒரே போராட்டமான காலமாக அமைந்தாலும் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் எமக்கு அன்பும் அரவணைப்பும் பாதுகாப்பும் அளித்து கல்வியை போதித்ததன் பயனாக நான் இந்தப் பெறுபேற்றினை பெற்றேன்.


நான் பாடசாலைக் கல்வியுடன் தனியார் கல்வி நிலையத்திலும் கற்று வந்தேன். அத் துடன் வலம்புரி நாளிதழின் கருத்தரங்கு, பத்திரிகையில் வெளிவரும் மாதிரி வினாத்தாள்கள் என்பவற்றின் மூலமும் பயிற்சி பெற்றேன்.

இவற்றுக்கு மேலாக எமது பாடசாலையின் வேம்படி விநாயகரின் அருளாசியும் எனக்கு துணையாக இருந்தது என்றார்.

நெருக்கடியான சூழ்நிலையிலும் கஷ்டங்களின் மத்தியிலும் சுயமாக கற்கும் ஆற்றல் காரணமாகவே எமது மகன் இப் பெறுபேற்றை பெற்றான் என பெற்றோர்கள் ஆனந் தக் கண்ணீருடன் தெரிவித்தனர்.

மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில், கிராமப்புற பாடசாலையான இப் பாடசாலை குறிப்பிடத்தக்க வசதிகள் எவையும் இல்லாத சூழ்நிலையிலும் இடம்பெயர்ந்து எழுதுமட்டு வாழ் பிரதேசத்தில் இருந்துவந்து கடந்த இரு வருடமாக எமது பாடசாலையில் கல்வி பயின்று இம் மாணவன் சிறந்த பெறுபேற்றை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் கு.சிவானந்தன் தெரிவித்தார். (ச-5)

## மரண அறிவித்தல்



# நா.ஆ.நமசிவாயம்

### (புங்குடுதீவு திடீர் மரணவிசாரணை அதிகாரியும், சமாதான நீதிவானும்)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட நா.ஆ.நமசிவாயம் நேற்று (19.09.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் (ஸ்தாபகர், புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம்,புங்குடுதீவு மேற்கு பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்), வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் மங்கையற்கரசியின் அன்பு கணவரும் பிரேமகுமார் (Retired Chief Clerk), சத்தியகுமார் (FRANCE), மோகனகுமார் (FRANCE), சுரேஷ்குமார் (பதிவாளர்நாயகம் அலுவலகம்,கொழும்பு),

தேவிகா (பிறப்பு, இறப்பு,திருமண பதிவாளர்,புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவமலர் (ஆசிரியை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) சிவகௌரி (FRANCE) கலாரஞ்சினி (FRANCE), கலாராணி (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), ஸ்ரீகாந்தன் (நகர அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லோகபிரசாத், பிரவீணா, யதுர்சன்,அர்சினி, நிர்சினி, அனுசன், தனுசா, விஜித்தா, சியாயினி, துஷாயினி, சாயுகன், துஷாந், நிதுசாந் ஆகியோரின் பேரனும், சுபராஜாவின் (பதிவாளர் அலுவலகம் கச்சேரி, யாழ்ப்பாணம்) பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.09.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**43,சம்பியன் லேன்,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்**
**ஆ.ந.பிரேமகுமார்**
**(மகன்)**

(1689)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.